மன்றம்

இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.

மலர் 4 | 1 - 5 - 55 | இதழ் 1



அமெரிக்காவை விடுவித்த
விடுதலைவீரன்

வாசிங்டன்

ள்நாடு அணா 4 ★ மாதமிருமுறை ★ வெளிநாடு அணா 5

'சாமி'யார் 'ஆசாமி'யார் ஆனர்!

"திராவிடநாடு" அலுவலகப் பொறுப்பாளராக இருந்துவரும் தோழர் ஈழத்து அடிகள் ஒரு காலத்தில் ஸ்ரீலஸ்ரீ ஈழத்துச் சிவானந்தஅடிகளாக விளங்கினர்.

கையிலே கமண்டலம், உடலிலே காவி உடை, கழுத்திலே உருத்திராக்கக் கொட்டை, நெற்றியிலே திருநீற்றுப் பட்டை, காலிலே கட்டை, தலையோ மொட்டை —இந்தத் 'தவத்திருக்கோலத்'தோடுதான் அவர் 1938-ஆம் ஆண்டிற்கு முன்னல் காட்சியளித்தார். ஈழநாட்டிலே பிறந்து, சிறுவயதிலேயே 'தவத்திருக்கோலம்' பூண்டு, 'ஸ்தல யாத்திரைகள்' பலசென்று, இறுதியாகக் கரூரில் அறிவுதயக் கழகம் என்ற ஒரு நிறுவனத்தை ஏற்படுத்திக்கொண்டு, 'சிவபூசை', 'சக்திபூசை' களில் மும்முரமாக ஈடுபட்டிருந்தார். தமிழினிடத்தே ஆழ்ந்த பற்றும் அதன் வளர்ச்சியிலே அக்கரையும் கொண்டு விளங்கினர். தோழர் இராசகோபாலாச்சாரி யார் 1938-ல் இந்தியைக் கட்டாயப் பாடமாக்குவேன் என்று அறிக்கைவிட்டபோது, அதனை எதிர்த்து ஆச்சாரியாருக்கு முதல் தந்தி அடித்தவர் ஈழத்துச் சிவானந்த அடிகளே யாவார். இந்தி எதிர்ப்பு இயக்கத்தை அவர்தான் துவக்கினர். பிறகு தான் நாவலர் பாரதியார், பெரியார் இராமசாமி, அறிஞர் அண்ணு போன்றவர்கள் கலந்துகொண்டார்கள். ஈழத்துச் சிவானந்த அடிகள் இந்தி எதிர்ப்பின் முதல் சர்வாதிகாரியாகப் பணியாற்றிச் சிறைபுகுந்தார்.

ஈழத்து அடிகள் காவியுடைத் தோற்றத்தோடு சிறைபுகுந்திருந்தகாலை, அறிஞர் அண்ணு அவர்களும் சென்னையில் சிறைபுகுந்தார்கள். இருவரும் 'பி' வகுப் பில் வைக்கப்பட்டிருந்தனர். இருவரும் ஒருவரை யொருவர் காணவும், ஒருவரோ டொருவர் அளவளாவவும், ஒருவருக்கு ஒருவர் கருத்துக்களைப் பரிமாறிக்கொள்ளவும் மிக்க வாய்ப்பும், பொழுதும் ஏற்பட்டன. அறிஞர் அண்ணுவின் கருத்துக்கள் ஈழத்து அடிகளைக் கவர்ந்தன. 'பக்திச் சாமியார்' 'பகுத்தறிவுச் சாமியாரா'கச் சிறிது சிறி தாக மாறத்தொடங்கினர். 'அடிகளாரி'ன் உள்ளத்தை நன்கு அறியும் வாய்ப்பினைப் பெற்ற அறிஞர் அண்ணு அவர்கள், அடிகளாரின் உள்ளம் மண்ணுசை—பெண் ணுசை—பொன்னுசை எதையும் எப்பொழுதும் விட்டதில்லை என்பதைத் தெளிவா கப் புரிந்துகொண்டார்கள். 'அடிகளாரி'ன் பொய்மை வாழ்க்கையைப்பற்றி அண்ணு அவர்கள் அடிக்கடி கேலியும் கிண்டலும் செய்யும்போதெல்லாம் "நான் மட்டும் இப்படியல்ல; இந்த உடையில் இருக்கும் எல்லாச் சாமியார்களும் இப்படித் தான்; இதற்கு விதிவிலக்கு அரிதிலும் அரிது" என்று ஈழத்து அடிகள் செப்புவா ராம். கோணல் வாழ்க்கையைவிட்டு, நேரான வாழ்க்கைக்கு நேர்முகமாக உள்ளன் போடு வரச்சொல்லி அண்ணு அவர்கள் அடிகளாரைச் சிறையில் வற்புறுத்துவார் களாம்.

ஈழத்துச் சிவானந்த அடிகள் வெளியில் வந்த பிறகும் சிலநாட்கள் காவியுடை யோடு காட்சி அளிக்க, அறிஞர் அண்ணு அவர்கள் "உள்ளத்திலே ஆசை அவ்வ ளவும் இருக்க, காவியுடையேன்? திருநீற்றுப் பட்டையேன்?" என்று கேலிசெய்ய, ஸ்ரீலஸ்ரீ ஈழத்துச் சிவானந்த அடிகள் பொய்மை வாழ்க்கையைவிட்டு, உண்மையான நேர்மையான வாழ்க்கையில் புகுந்து, தூய வெள்ளையுடைக் கோலம்பூண்டு தோழர் ஈழத்து அடிகளாக மாறினர். அண்ணுவின் அறிவுரை 'சாமி'யாரை, 'ஆசாமி'யாராக ஆக்கிற்று! சிறையில் ஏற்பட்ட பலன்களில் இதுவும் ஒன்று!

மன்றம்

இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.

1 - 5 - 55 ஞாயிற்றுக்கிழமை

புது மலர் பூத்தது!

“மன்றத்”தின் நான்காவது மலர் பூக்கத் தொடங்கி, அதன் முதல் இதழ் மொட்டவிழ்ந்து இன்று விரிய ஆரம்பித்திருக்கிறது!

“மன்றத்”தின் நறுமணத்தை நாடிவருவோர் அத்தனைப் பேர்க்கும் நான்காவது மலர் பூத்துள்ள நற்செய்தியை அறிவித்து, அவர்களுக்கு நல்வரவுகூறி, எம் உளம்கனிந்த வணக்கத்தையும் வாழ்த்துக்களையும் அனைவர்க்கும் முதற்கண் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறோம்.

“மன்றத்”தின் மணத்தை நுகர்ந்தோரெல்லாம், ‘“மன்றம்” கருத்து மணங்கமழும் ஒரு அரிய ஏடு’ என்று பாராட்டியும புகழ்ந்தும் கூற, அச்சொற்கள் எம் எளிய செவிகளில் விழும்போது, “ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச், சான்றோனெனக் கேட்ட தாய்” என்று வள்ளுவப் பெருந்தகையார் சுட்டிக்காட்டுவதுபோன்றதொரு உவகை, எம் உள்ளத்தே ஊறி எழுந்து, எம் உள்ளம், உடல், ஒவ்வொன்றையும் சிலிர்க்கச் செய்கின்றது!

தமிழகத்தில் “மன்றத்”தின் மணம் பரவியிருக்கும் இடங்களின் அளவுக்கும், பரவவேண்டிய இடங்களின் அளவுக்கும் இடையே உள்ள இடைவெளி மிகப்பெரிதாகும்; அதுபோலவே “மன்றத்”தின் இதழைக் கையிலே ஏந்தி நிற்போரின் எண்ணிக்கைக்கும் ஏந்தி நிற்கவேண்டியவர்களின எண்ணிக்கைக்கும் இடையே உள்ள இடைவெளி மிகமிகப் பெரிதாகும். “மன்றத்”திடத்தே நீங்காப் பற்றும், தணியா ஆர்வமும், குறையா அக்கறையும் கொண்டுள்ள மன்றப் படிப்பாளர்கள், எமக்குச் செய்யவேண்டிய அரும்பெரும் உதவி என்று நாம் விரும்பி அவர்களைக் கேட்டுக்கொள்வது என்னவென்றால், மேலே சுட்டிக்காட்டியுள்ள இடைவெளிகளின் அளவை மிகமிகச் சிறுக்கச்செய்து, “மன்றத்”தோடு உறவுகொள்பவர்களின் எண்ணிக்கையைப் பெருக்க அவர்கள் தம்மாலான முயற்சிகளை எடுக்கவேண்டும் என்பதேயாகும்.

அன்றாடம் கூலிவேலை செய்து, கிடைக்கும் கூலியை வைத்துக்கொண்டு வாழ்க்கையை ஈடேற்ற முயலும் பாட்டாளிமகன் போன்றுதான் “மன்றமு”ம் தன் வாழ்க்கையை ஈடேற்றவேண்டிய நிலைமையிலிருக்கிறது. ஏழைப் பாட்டாளியின் சீரிய கருத்துக்கள் தவழும் உள்ளமும், உழைக்கும் திறனும் எவ்வளவுதான் உயர்ந்தவைகளாக இருப்பினும், அவனது வாழ்வு வளமாகவும், வசதியாகவும், வனப்பாகவும் எப்படியிருக்க முடியாதோ அப்படியேதான், “மன்றமு”ம் ஏற்றமும் எழிலும் பெறமுடியாத நிலையிலிருந்துவருகிறது. “மன்றம்” பூத்துக் குலுக்கிடும் இதழகள் நறுமணக் கருத்துக்களோடு நல்ல வனபபுள்ளனவாகத் திகழ, அதன் வரிடத்துத் தமிழ்ப்பெருமக்களின் அன்பு எனும் நீர்ப்பாய்ச்சலும், ஆதரவு எனும் எருவிடுதலும் மிகவாகத் தேவைப்படுகின்றன. “மன்றத்”திடத்து அக்கரை கொண்டுள்ள நண்பர்கள் அந்த அன்பையும், ஆதரவையும் திரட்ட முன்வரவேண்டும் என்று வேண்டிக் கேட்டுக்கொள்கிறோம்.

“மன்றத்”தின்மணத்தை நுகரும் வல்லமை, சிறிதளவாவது கற்றறிந்த மக்களின் பட்டியலில் சேர்ந்திருப்போரைத் தவிர, ஏனையோர்க்கு அவ்வளவு எளிதில் ஏற்படாது என்பது எமக்குத் தெரியும். சாதாரண அரைகுறைப் படிப்பாளர்களும் புரிந்துகொள்ளும் வகையில் திராவிட முன்னேற்றக் கழகக் கருத்துக்களையும், பொது அறிவுக் கருத்துக்களையும் எடுத்து முன்வைக்கும் ஏடுகள் பலப்பல இருக்கின்ற காரணத்தால்தான், தமிழ் நன்கு கற்றறிந்த பெருமக்களுக்குச் சிந்தனையைக் கிளருவதாகவும், சிந்தனைக்கு விருந்து ஊட்டுவதாகவும் “மன்றம்” விளங்கட்டும் என்று கருதிச், சற்றுக் கடுமையான நடைபோட்டுச் செல்லும்படியாக “மன்றத்”தை உலாவவிட்டிருக்கிறோம். “மன்றம்” மாம்பழம், வாழைப்பழம் போன்று எடுத்தவுடனே சுவையளிப்பதாக இருக்காது; பலாச்சுளைபோல் சற்று முயற்சி எடுத்துத் துருவிப் பார்த்ததற்குப் பிறகே சுவை பயப்பதாக இருக்கும். வாயினிப்புக்குப் பலாச்சுளையும் தேவைப்படுவதுபோல், பொதுவாகத் தமிழ்ப்பெருங்குடிமக்களின—குறிப்பாகக் கழகத் தோழர்களின் உள்ளவினிப்பிற்கு “மன்றமு”ம் தேவைப்

பட்டதொன்று என்று கருதி அவர்கள் முன்னிலையில் பெருமகிழ்ச்சியோடு வைக்கிறோம்.

போதிய பொருள்வசதியில்லாத காரணத்தாலும், பொதுவாழ்க்கையில் ஈடுபட்டிருப்பதால் ஏற்படும் நேரமின்மை காரணமாகவும், விற்பனையாளர்களில் விரல்விட்டு எண்ணக்கூடிய ஒருசிலரைத்தவிர பெரும்பகுதியினர் எம்மோடு சரிவர ஒத்துழைக்காமல் இருந்துவிடுகிற காரணமாகவும் யாம் எண்ணும் முறையில் "மன்றத்"தை ஏற்றமாகவும், எடுப்பாகவும், எழிலுள்ளதாகவும் கொண்டுவர இயலவில்லை. சிறிது சிறிதாக ஏற்படும் ஆக்கத்தை அடிப்படையாகக் கொண்டு போகப்போகச் சீரிய முறையில் "மன்றத்"தை வளர்க்கலாம் என்ற பேரவாவுடையேம் யாம். எம் ஆவலை நிறைவேற்றிவைக்க விற்பனையாளர்களும், படிப்பாளர்களும், நண்பர்களும் பெரிதும் ஒத்துழைப்பு தருவார்களாக!

இந்த நாட்களில் செய்தித்தாளோ அல்லது கருத்திதழோ குறைந்தவிலையில் மசவ்வனே நடைபெற்று, அளவிலும் வனப்பிலும் உயர்ந்துகொண்டே போகவேண்டுமானால், விளம்பரம் என்னும் வற்றாத வாய்க்கால் நீர் பாய்ந்துகொண்டேயிருக்கவேண்டும். பொதுவாகக் கழக ஏடுகளுக்கு, குறிப்பாக "மன்றத்"திற்கு அந்த வாய்க்கால் நீர் பாய்வதே இல்லை; எப்பொழுதோ சிற்சில சொட்டுக்கள் கசிகின்றன. "மன்றத்"திடத்து ஆர்வங்கொண்டுள்ள தோழர்கள் விளம்பரம் தேடித்தந்து, "மன்றத்"தின் அடிப்படையை உறுதியாக்கப் பெரிதும் உதவிபுரியவேண்டும்.

"மன்றத்"தின் வளர்ச்சி குறித்து அடிக்கடி அறிவுரை கூறி, எமக்கு அவ்வப்போது பேராதரவு காட்டிவரும் அறிஞர் அண்ணா அவர்களுக்கு இந்தப்போது எம் மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறோம்! "மன்றத்"தை ஒழுங்காக விற்பனைசெய்து நல்லுறவை நிலைநாட்டிவரும் விற்பனையாளர்க்கும், தொடர்ந்து ஆதரவுகாட்டிவரும் சந்தாத் தோழர்களுக்கும், ஏனைய படிப்பாளர்க்கும் எம் மனமுவந்த நன்றி உரித்தாகுக! "மன்றத்"திற்குச் சீரிய கட்டுரைகளை எழுதியுதவும் கட்டுரையாளர்க்கும், ஓவியங்கள் வழங்கும் ஓவிய நிபுணர்களுக்கும், "மன்றத்"தின் ஆக்கங்குறித்து அவ்வப்போது அறிவுரைகள் கூறும் நண்பர்களுக்கும், "மன்றம்" அலுவலகத்தில் பணியாற்றுவோர்க்கும் எம் உளம் கனிந்த நன்றி உரித்தாகுக!

வாழ்க "மன்றம்" படிப்போர் உள்ளம்!

வாழ்க புரட்சிக்கவிஞர்!

இருபதாம் நூற்றாண்டுத் தமிழகத்தின் ஈடும் எடுப்பும் அற்ற தனிப்பெருங் கவிஞரான **புரட்சிக்கவிஞர் பாரதிதாசன்** அவர்கள் 17-4-5 ஆம் நாளோடு 64 ஆண்டு வாழ்நாளை நிறை வேற்றிவிட்டு 65-வது ஆண்டைத் தொடங் கும் நிலையை அடைந்திருக்கிறார்கள். நமது வாழ்நாளிலேயே புரட்சிக்கவிஞரும் வாழ்கிறா என்பதே நமக்குப் பெருமையும், பெருமிதமும் அளிப்பதாகும். கவிதைவானில் புரட்சிக்கவி ஞர் அவர்களை முன்னிறுத்தி, மற்ற தமிழ் நாட்டுக் கவிஞர்களை யெல்லாம் உடன்வைத் துப் பார்க்கும்போது, வட்டமுழு வெண்ணிலா வும் மற்ற உடுக்களும் சேர்ந்து தோற்றம் அளிப்பதைப்போன்றதொரு காட்சி, நம் மனக் கண்முன் தெளிவுபடும்.

புரட்சிக்கவிஞரின் கவிதைகளின் அருமை பெருமைகளை விளக்கிக் கூறவேண்டிய இன்றி யமையாமை இல்லை. அவற்றைத் தமிழ்நாடு நன்கு அறியும். அவருக்குப் பொற்கிழிதந்து பொன்னாடை போர்த்திக் கொண்டாடப்பட் விழா போன்று, வேறு எந்தப் புலவருக்கும் தமிழகத்தில் அத்துணைச் சீரோடும் சிறப்போ டும் பாராட்டு விழா இதுவரையில் நடைபெற வில்லை என்றால் அது மிகுத்துக் கூறுவதா காது. அவருடைய கவிதைகளெல்லாம் தெவிட்டாத் தேன்துளிகள். புலவர்கள் சிறப் பித்துச் சொல்லும் ஒன்பதுவகைச் சுவை களும் அவரது கவிதைகளில் துள்ளி விளைய டுவதை நாம் எப்பொழுதும் கண்டுகளிக்க லாம். அவரது வற்றாக் கவிதைஉள்ளத்தி லிருந்து, கவிதை வெள்ளம் ஓயாமல் பெருக் கெடுத்து ஓடித் தமிழ் மக்களின் நெஞ்சவயல் களிலெல்லாம் எப்பொழுதும் பாய்ந்து, மு போகப் பகுத்தறிவுக்கருத்து அறுவடையைத் தந்துகொண்டேயிருக்கவேண்டும் என்பது எமது அவா! அந்த ஆவல் புரட்சிக்கவிஞ பல்லாண்டுக்காலம் வாழ்க! வாழ்க !! வாழ்க!! என்று எம்மை முழக்கமிடச் செய்கிறது!

தமிழ் மக்கள் உள்ளத்தில் என்றென்று அழியாப் புகழை நிலைநிறுத்தும் பெரும்பணி ஒன்றைப் புரட்சிக்கவிஞர் செய்துவருவது எம்மை மட்டற்ற மகிழ்ச்சியில் இருத்துகிறது அதுதான் திருக்குறளுக்குப் புது உரை காணும் பணியாகும். புரட்சிக்கவிஞரின் புது உரை, நம்மைத் திருவள்ளுவர் அருகில் எளிதில் கொண்டுபோய்ச் சேர்ப்பதோடு திருக்குறள்மீது படியவிட்டிருந்த மாசினைப் போக்கவும், அதனைப் பொலிவுறச் செய்

கருத்துக் கதிர்

ண்டூங் மாநாடு

இந்தோனேசியாவைச் சேர்ந்த பண்டூங் ன்ற இடத்தில், ஆசியா-ஆப்பிரிக்காக் கண் ங்களைச் சார்ந்த தன்னாட்சிக்கொண்ட நாடு ள் 28 ஒன்றுகூடித், தம்மிடையே நல்லுற வையும் ஒற்றுமையையும் ஏற்படுத்திக்கொள் வும், ஆசியா-ஆப்பிரிக்கா நாடுகளிடையே ள்ள பிரச்சினைகளுக்கு வழிவகை காணவும் யன்றுள்ள செய்தி போற்றி வரவேற்கத் க்கதாகும். எதற்கெடுத்தாலும் மேலை வல் ரசுகளின் அறிவுரையையும் கட்டளையையும் திர்பார்த்து நடக்கும் நிலைமையிலிருந்து ந்த ஆசிய-ஆப்பிரிக்கா நாடுகள், தன்மதிப் பாடு வீறுகொண்டு எழுந்து. தம்முடைய ிரச்சினைகளைத் தாமே கூடிக்கலந்து முடிவு செய்யவேண்டும் என்ற உணர்வோடு முன் ந்திருப்பது மகிழ்ச்சிக்குரியதாகும். பண்டூங் ாநாட்டில் எதிர்பார்த்ததிற்குமேல் விட்டுக் காடுக்கும் மனப்பான்மையும், வேற்றுமை ளுக்கிடையே ஒற்றுமை காணும் தன்மையும் லவியிருக்கின்றன.

பண்டூங் மாநாடு எப்படியும் குழப்பத்தில் டியும், நாம் கேலிச்சிரிப்பு சிரித்து மகிழலாம் ன்ற நினைவோடுதான் மேற்கு வல்லரசுகள் திர்பார்த்துக்கொண்டிருந்தன. ஆனால் வைகளுக்கெல்லாம் சிறிது அச்சமும், அதிர்ச்சியும் ஏற்படும் வகையில் பண்டூங் மாநாடு சிறப்பாக நடந்தேறியிருக்கின்றன. நாடுகளின் தன்னுரிமை காப்பாற்றப்பட வேண்டும், வல்லரசுகளின் ஆதிக்க ஆட்சி அகற்றப்படவேண்டும், நிறத்திமிர் ஆதிக்கம் ஒழிக்கப்படவேண்டும், உலக அமைதி நிலவ வேண்டும், கொரியா—பார்மோசா—தெ. ஆப்பிரிக்கா போன்ற பிரச்சினைகளுக்கு வழிவகை காணவேண்டும், கூட்டுப் பாதுகாப்பு ஏற்பட வேண்டும் என்பனபோன்ற நல்ல முடிவுகளை மாநாடு எடுத்துள்ளது. இந்த முடிவுகள் நல்ல முறையில் நிறைவேறுவதைப் பொறுத்துதான் மாநாட்டின் முழுவெற்றி கணக்கிடப்படும். 'பண்டூங்' என்றால் 'கவிழ்ந்த படகு' என்று பொருளாம். ஆசியா - ஆப்பிரிக்காப் படகு கவிழ்ந்தபடியே கிடக்கிறதா அல்லது மாநாட்டின் முயற்சியால் நிமிர்த்தப்பட்டதா என்ற விபரம் போகப்போகத் தெரியும்.

பண்டூங் மாநாட்டின் மூலம் சீனாவின் முக்கியத்துவமும், அது எப்படி எதிர்காலத்தில் ஆசியாவின் வழிகாட்டியாக ஆகப்போகிறது என்பதும், சூ-என்-லாயின் அரசியல் நுண்ணறிவு எவ்வளவு உயர்ந்து விளங்குவதாகி விட்டது என்பதும் உலகத்திற்குத் தெள்ளத் தெளிவாக்கப்பட்டுவிட்டன. பண்டூங் மாநாட்டில் பண்டித நேருவையே சூ-என்-லாயின் நிழல் மறைத்துவிட்டது என்றால் அது மிகையாகாது. சூ-என்-லாயின் பேரும் புகழும் இந்த மாநாட்டின் வாயிலாக மிக்கு ஓங்கிவிட்டன என்றுதான் கூறவேண்டும்.

பண்டூங் மாநாட்டில் கலந்துகொண்டுள்ள 28 நாடுகளில் 3 நாடுகள்தான் திராவிடத்தை விட மக்கள் எண்ணிக்கையில் பெரிய நாடுகள்; மற்ற 25 நாடுகள் திராவிடத்தைவிடச் சிறியவைதான். 12 இலட்சம் மக்களைக்கொண்ட லெபனான் போன்ற நாடுகள் பெற்றுள்ள

ாட்டவும் பயன்படுவதாக அமைந்திருக் றது. அதனை விரைவில் அச்சிட்டுத் தமிழ த்தார்க்கு வழங்கவேண்டும் என்பதைத் ான் நாம் புரட்சிக்கவிஞர் அவர்களை வேண் க் கேட்டுக்கொள்கிறோம்.

வாழ்க புரட்சிக்கவிஞர் பாரதிதாசனார்!
ாழ்க அவரது கவிதை உள்ளம்!

அறிவியல் பேரறிஞர் ஐன்சுடைன்

இன்றைய உலகின் ஒரு பெரும் சிறந்த அறிவியல் பேரறிஞர் ஐன்சுடைன் இயற்கை எய்தினார் என்ற செய்தி நமக்கு மீளமுடியாத் துக்கத்தையும் துயரத்தையும் தருவதாகும். அவரது இழப்பு அறிவியல் உலகிற்கே, ஏன் இவ்வுலகிற்கே ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். அவரது அறிவுத்திறனால் ஏற்பட்ட அரிய விளைவுகள் அளப்பரியனவாகும். அவருக்கு இவ்வுலகம் என்றென்றும் கடமைப்பட்டிருக்கிறது.

வாழ்க ஐன்சுடைன் புகழ்! வெல்க அவரது அறிவியல் கண்டுபிடிப்புகள்!

தகுதியைக்கூட 8 கோடி மக்களைக்கொண்ட திராவிடம் பெற முடியவில்லை. திராவிடம் தனி நாடாக இருக்குமேயானால், உலக அரங்கில் திராவிடத்திற்கு தனிப்பெருஞ் செல்வாக்கு இருந்து தீருமே! இந்தியாவோடு இணைந்திருப்பதால் திராவிடத்திற்கு எல்லா வகையிலும் நட்டமே தவிர, எவ்வகையிலும் இலாபம் இல்லையே! பண்டுங் மாநாட்டையும், அதில் கலந்துகொண்டுள்ள நாடுகளையும் பார்த்த பிறகாவது, திராவிடத்திலுள்ளவர்களுக்குத், திராவிடநாடு தனிக்கூட்டாட்சி நாடாக ஆகவேண்டும் என்ற உணர்வு பிறப்பதாக!

❖ ❖ ❖

யார் கூறுவது மடமை?

"உலகம் முழுவதும் ஒற்றுமையை நாடிநிற்கையில் வடநாடு என்றும் தென்னாடு என்றும் இங்கு பேசுவது மடமை" என்று சென்னை நிதி அமைச்சர் தோழர் சி. சுப்பிரமணியம் அவர்கள் அண்மையில் கோவைப் பொதுக்கூட்டம் ஒன்றில் பேசும்போது குறிப்பிட்டுள்ளார்கள்.

அவர் 'வெறும்' சுப்பிரமணியமாக இருந்து பேசியிருப்பாரேயானால் நாம் கவலைப்பட்டிருக்க மாட்டோம்; வெற்றுக்கூற்று என்று ஒதுக்கித் தள்ளியிருப்போம். அவர் 'அமைச்சர்' சுப்பிரமணியமாக இருந்து பேசியுள்ளார்.

எந்த உலகநாடுகளின் ஒற்றுமையைப்பற்றித் தோழர் சி. சுப்பிரமணியம் குறிப்பிடுகிறாரோ அந்த ஒற்றுமையை இழக்கவேண்டிய அவசியம் திராவிடத்துக்கு ஒரு நாளும் ஏற்படாதே! திராவிடத்தைவிடச் சிறிய நாடுகளாக உள்ள 88 நாடுகள் நிதி அமைச்சர் குறிப்பிடும் உலகில் எப்படித் தனித்தனி உரிமைவாய்ந்த தன்னாட்சி நாடுகளாக இலங்குகின்றனவோ, அதைப்போலத்தான் திராவிடமும் இலங்க விரும்புகிறது. 88 சிறிய நாடுகள் தனித்தனி நாடுகளாக நிலவுவது 'அறிவுடைமை'யாகப் படும் தோழர் சி.சுப்பிரமணியம் அவர்களுக்கு அவைகளைவிடப் பெரிதாக இருக்கும் திராவிடம் தனிநாடாகத் திகழவேண்டும் என்று சொல்லுவதுமட்டும் 'மடமை'யாகப் படுவானேன்? உலகில் உள்ள எந்த நாடு தன்னுடைய எல்லைக்கோடுகளை அழித்துவிட்டுத், தன் உரிமைகளையெல்லாம் ஒப்படைத்து வேறு ஒரு நாட்டோடு ஒற்றுமையாக இணைந்துகொண்டது என்று தோழர் சுப்பிரமணியம் அவர்களை அன்போடு கேட்கிறோம்? இந்தியாவிலிருந்து பாக்கித்தான் பிரிந்ததும் பாலத்தீன்—காசுமீர் — கொரியா — இந்தோ சீனா—கிரேட் பிரிட்டன்—செர்மனி ஆகியவைகள் இரண்டு இரண்டாகப் பிரிந்ததும் பிரிவினைக்கான சீரிய எடுத்துக்காட்டுகளாகும். பன்னெடுங் காலமாக இரண்டாக இருந்த இரு வேறுநாடுகள் தானே விரும்பி ஒன்றாக இணைந்ததற்குத் தோழர் சுப்பிரமணியம் அவர்கள் எந்த எடுத்துக்காட்டை முன்வைப்பார்? உலகநாடுகள் எல்லாம் எல்லைகோடுகளை அழித்துவிட்டு ஒன்றாக இணைந்துநின்று ஒற்றுமையை வளர்க்கவில்லையே! எல்லாம் தனித்தனியாகப் பிரிந்துநின்றுதான் தேவையான ஒற்றுமையை வளர்க்கின்றன, அதே தேவையான ஒற்றுமையைத் திராவிடமும் பிரிந்து வளர்க்கலாமே! இதில் தடையோ தகராறோ ஏதும் இல்லையே!

'மடமை' உள்ளபடியே திராவிடப் பிரிவினை கோருவதில் இல்லையே; தோழர் சுப்பிரமணியம் அவர்கள் கூற்றிலல்லவா இருக்கிறது! தோழர் சுப்பிரமணியம் தம்மைத்தாமே தெளிவுள்ளவராகத் திருத்திக்கொள்வாரேயானால் அதுவே நாட்டுக்குச் செய்யும் நல்ல பணியாகும்!

❖ ❖ ❖

மனிதனை மனிதன் இழுக்கும் அவல நிலை

மனிதர்களை ரிக்சாவில் ஏற்றிக்கொண்டு மனிதர்களே இழுத்துக்கொண்டு ஓடும் அவல நிலையை ஒழிக்கப் பெங்களூர் நகரசபையினர் முன்வந்திருப்பது போற்றுவதற்குரிய செயலாகும். மனிதனை மனிதன் இழுக்கும் காட்சி நாகரிக நல்லுணர்ச்சியை நெருஞ்சிமுள் குத்துவதுபோன்று குத்தும் தன்மையாகும். மனிதமாண்பு வளரவேண்டும் என்று எண்ணிடுகிற இக்காலத்தில் அத்தகைய காட்சி நிலவ ஒருபோதும் இடமளிக்கக்கூடாது. இழுக்கும் ரிக்சாக்களில் ஈடுபட்டுள்ளவர்கள் மாற்று வேலையாக இருருளி ரிக்சாக்களை ஓட்டும்படி, சிறிதுகாலத்திற்குச் செய்யலாமே ஒழிய, இழுக்கும் முறை அறவே ஒழிக்கப்பட வேண்டும். பெங்களூர் நகரசபையைப்போல சென்னை நகரசபையும், பிற நகரசபைகளும் இழுக்கும் ரிக்சாவை அறவே நீக்கும் நடவடிக்கையை விரைவில் மேற்கொள்ளவேண்டும். அப்பொழுதுதான் பொது நாகரிகப் பண்பு ஓரளவுக்குப் போற்றப்பட்டதாகும்!

தகுதியைக்கூட 8 கோடி மக்களைக்கொண்ட திராவிடம் பெற முடியவில்லை. திராவிடம் தனி நாடாக இருக்குமேயானால், உலக அரங்கில் திராவிடத்திற்கு தனிப்பெருஞ் செல்வாக்கு இருந்து தீருமே! இந்தியாவோடு இணைந்திருப்பதால் திராவிடத்திற்கு எல்லா வகையிலும் நட்டமே தவிர, எவ்வகையிலும் இலாபம் இல்லையே! பண்டுங் மர்நாட்டையும், அதில் கலந்துகொண்டுள்ள நாடுகளையும் பார்த்த பிறகுள்வது, திராவிடத்திலுள்ளவர்களுக்குத், திராவிடநாடு தனிக்கூட்டாட்சி நாடாக ஆகவேண்டும் என்ற உணர்வு பிறப்பதாக!

❖ ❖ ❖

யார் கூறுவது மடமை?

"உலகம் முழுவதும் ஒற்றுமையை நாடிநிற்கையில் வடநாடு என்றும் தென்னாடு என்றும் இங்கு பேசுவது மடமை" என்று சென்னை நிதி அமைச்சர் தோழர் சி. சுப்பிரமணியம் அவர்கள் அண்மையில் கோவைப் பொதுக்கூட்டம் ஒன்றில் பேசும்போது குறிப்பிட்டுள்ளார்கள்.

அவர் 'வெறும்' சுப்பிரமணியமாக இருந்து பேசியிருப்பாரேயானால் நாம் கவலைப்பட்டிருக்க மாட்டோம்; வெற்றுக்கூற்று என்று ஒதுக்கித் தள்ளியிருப்போம். அவர் 'அமைச்சர்' சுப்பிரமணியமாக இருந்து பேசியுள்ளார்.

எந்த உலகநாடுகளின் ஒற்றுமையைப்பற்றித் தோழர் சி. சுப்பிரமணியம் குறிப்பிடுகிறாரோ அந்த ஒற்றுமையை இழக்கவேண்டிய அவசியம் திராவிடத்துக்கு ஒரு நாளும் ஏற்படாதே! திராவிடத்தைவிடச் சிறிய நாடுகளாக உள்ள 88 நாடுகள் நிதி அமைச்சர் குறிப்பிடும் உலகில் எப்படித் தனித்தனி உரிமைவாய்ந்த தன்னாட்சி நாடுகளாக இலங்குகின்றனவோ, அதைப்போலத்தான் திராவிடமும் இலங்க விரும்புகிறது. 88 சிறிய நாடுகள் தனித்தனி நாடுகளாக நிலவுவது 'அறிவுடைமை'யாகப் படும் தோழர் சி.சுப்பிரமணியம் அவர்களுக்கு அவைகளைவிடப் பெரிதாக இருக்கும் திராவிடம் தனிநாடாகத் திகழவேண்டும் என்று சொல்லுவதுமட்டும் 'மடமை'யாகப் படுவானேன்? உலகில் உள்ள எந்த நாடு தன்னுடைய எல்லைக்கோடுகளை அழித்துவிட்டுத், தன் உரிமைகளையெல்லாம் ஒப்படைத்து வேறு ஒரு நாட்டோடு ஒற்றுமையாக இணைந்துகொண்டது என்று தோழர் சுப்பிரமணியம் அவர்களை அன்போடு கேட்கிறோம்? இந்தியாவிலிருந்து பாக்கித்தான் பிரிந்ததும் பாலத்தீன்—காசுமீர் — கொரியா — இந்தோசீனா—கிரேட் பிரிட்டன்—செர்மனி ஆகியவைகள் இரண்டு இரண்டாகப் பிரிந்ததும் பிரிவினைக்கான சீரிய எடுத்துக்காட்டுகளாகும். பன்னெடுங் காலமாக இரண்டாக இருந்த இரு வேறுநாடுகள் தானே விரும்பி ஒன்றாக இணைந்ததற்குத் தோழர் சுப்பிரமணியம் அவர்கள் எந்த எடுத்துக்காட்டை முன்வைப்பார்? உலகநாடுகள் எல்லாம் எல்லைகோடுகளை அழித்துவிட்டு ஒன்றாக இணைந்துநின்று ஒற்றுமையை வளர்க்கவில்லையே! எல்லாம் தனித்தனியாகப் பிரிந்துநின்றுதான் தேவையான ஒற்றுமையை வளர்க்கின்றன, அதே தேவையான ஒற்றுமையைத் திராவிடமும் பிரிந்து வளர்க்கலாமே! இதில் தடையே தகராறோ ஏதும் இல்லையே!

'மடமை' உள்ளபடியே திராவிடப் பிரிவினை கோருவதில் இல்லையே; தோழர் சுப்பிரமணியம் அவர்கள் கூற்றிலல்லவா இருக்கிறது! தோழர் சுப்பிரமணியம் தம்மைத்தாமே தெளிவுள்ளவராகத் திருத்திக்கொள்வாரேயானால் அதுவே நாட்டுக்குச் செய்யும் நல்ல பணியாகும்!

❖ ❖ ❖

மனிதனை மனிதன் இழுக்கும் அவல நிலை

மனிதர்களை ரிக்சாவில் ஏற்றிக்கொண்டு மனிதர்களே இழுத்துக்கொண்டு ஓடும் அவல நிலையை ஒழிக்கப் பெங்களூர் நகரசபையினர் முன்வந்திருப்பது போற்றுவதற்குரிய செயலாகும். மனிதனை மனிதன் இழுக்கும் காட்சி நாகரிக நல்லுணர்ச்சியை நெருஞ்சிமுள் குத்துவதுபோன்று குத்தும் தன்மையாகும். மனிதமாண்பு வளரவேண்டும் என்று எண்ணிடுகிற இக்காலத்தில் அத்தகைய காட்சி நிலவ ஒருபோதும் இடமளிக்கக்கூடாது. இழுக்கும் ரிக்சாக்களில் ஈடுபட்டுள்ளவர்கள் மாற்று வேலையாக இருருளி ரிக்சாக்களை ஓட்டும்படி சிறிதுகாலத்திற்குச் செய்யலாமே ஒழிய, இழுக்கும் முறை அறவே ஒழிக்கப்பட வேண்டும். பெங்களூர் நகரசபையைப்போல சென்னை நகரசபையும், பிற நகரசபைகளும் இழுக்கும் ரிக்சாவை அறவே நீக்கும் நடவடிக்கையை விரைவில் மேற்கொள்ளவேண்டும். அப்பொழுதுதான் பொது நாகரிகப் பண்பு ஓரளவுக்குப் போற்றப்பட்டதாகும்!

தொழிற்சங்கம் ★

[ம. சிங்காரவேலு பி. ஏ., பி. எல்.]

இந்தியத் துணைக்கண்டத்தில் தொழிலாளர் சங்கங்கள் ஏற்பட்டுச் சில ஆண்டுகள்தான் ஆகின்றன. இந்தச் சில ஆண்டுக் காலத்திற்குள் பலவிதத் தொழிற்சங்கங்கள் தோன்றி மறைந்துவிட்டன. சிற்சில இடங்களில் மட்டுமே சில தொழிற்சங்கங்கள் நிலைத்து நின்று வருகின்றன. அவைகளில் சில சங்கங்களுக்குரிய வேலைகளைச் செய்யாமலேயே தொழிற்சங்கங்களுக்குப் புறம்பான நடவடிக்கைகளில் நுழைந்துகொண்டு தடுமாறிவருகின்றன. இந்நிலைமைகளுக்குக் காரணம் தொழிற்சங்கங்களுக்குரிய கடமைகளைத் தெரிந்துகொள்ளாமல் இருந்துவருவதேயாகும்.

தொழிற்சங்கங்களின் முக்கிய தொழில்கள், அதாவது கடமைகள் மூன்று, அவையாவன :

முதலாவது : குறிப்பிட்ட தொழிற்சங்கத்தின் கீழ் இணைந்துள்ள தொழிலாளர்களுடைய உரிமைகளையும். சலுகைகளையும், வாழ்க்கை நலன்களையும், பாதுகாத்துக்கொள்ளவேண்டும்.

இரண்டாவது : குறிப்பிட்ட தொழிலை உண்டாக்கிய உரிமையாளரின் நேர்மையான மிகு வருவாயையும், தொழிலின் நேர்மையான நன்னோக்கத்தையும் பாதுகாத்தல் வேண்டும்.

மூன்றாவது : குறிப்பிட்ட தொழிலைப் பயன்படுத்திவரும் பொதுமக்களுடைய நலன்களைப் பாதுகாத்துவருதல் வேண்டும்.

இம்முத்தொழிலையும் அடிப்படையாகக் கொண்டு இயங்காத தொழிற்சங்கந்தான் நாளடைவில் அழிந்துபோவதற்குக் காரணமாகிவிடுகின்றது.

மேற்கூறிய முத்தொழிலைத்தான் தொழிற்சங்கங்கள் யாவும் தம் அடிப்படை நோக்கங்களாகக்கொண்டு இயங்கிவரவேண்டும். இம்மூன்று கடமைகளையும் இந்தியத் துணைக்கண்டத்தில் தோன்றியுள்ள தொழிற்சங்கங்கள் எல்லாமும் அன்றாடம் ஈடேற்றிவரவேண்டிய வேலைகளாக எண்ணிவரவேண்டும். இந்தக் கடமைகளை நன்கு பேணாத காரணத்தால், தொழிலாளர்களும், தொழிற்சாலை உரிமையாளர்களும், பொதுமக்களும் முழு நன்மை பெற முடியவில்லை.

இந்தியத் துணைக்கண்டத்தில் தோன்றியுள்ள தொழிற்சங்கங்களை ஐந்து, ஆறு வகைகளுக்கு உட்பட்டனவாகப் பிரிக்கலாம்.

1. போக்குவரத்திற்குரிய பற்றுக்கோடுகள் பற்றிய தொழிற்சங்கங்கள். அதாவது கப்பல், இரயில்வே, இட்ராம்வே, இரிச்சாவண்டி, குதிரை வண்டி, மோட்டார்வண்டி, முதலிய போக்குவரத்துப் பற்றுக்கோடுகளில் ஈடுபட்டு வேலைசெய்யும் தொழிலாளர்கள் அமைந்த சங்கங்கள்.

2. நெசவு ஆலைச் சங்கங்கள். அவையாவன பஞ்சு ஆலை, பட்டு ஆலை, பருத்தி ஆலை ஆகிய பல்வேறு ஆலைகளிலுள்ள தொழிலாளர்கள் அமைந்துக்கொள்ளும் சங்கங்கள்.

3. உற்பத்தி ஆலைச்சங்கங்கள். அவையாவன வீடுகளுக்கும், கப்பல்களுக்கும், இரயில்வேக்களுக்கும், இட்ராம்வேக்களுக்கும், போர்ப்படைகளுக்கும்வேண்டிய இரும்பு, எஃகுச் சாமான்களை உற்பத்திச் செய்யும் தொழிற்சாலைகள். சிமெண்ட் தொழிற்சாலை, கண்ணாடித் தொழிற்சாலை, காகிதத்தொழிற்சாலை போன்ற பல்வேறு தொழிற்சாலைகளைச் சேர்ந்த தொழிற்சங்கங்கள்.

4. சுரங்கத் தொழிற்சங்கங்கள். அவையாவன : நிலக்கரி, இரும்பு, பொன், வெள்ளி போன்ற கனிப்பொருள்களும், மண்ணெண்ணெய் போன்ற நீர்ப்பொருள்களும் தோண்டி எடுக்கும் சுரங்கத் தொழிற்சாலைகளைச் சேர்ந்த தொழிற்சங்கங்கள்.

5. அச்சுத் தொழிற்சங்கங்கள். அவையாவன அச்சுவார்த்தல், அச்சு அடித்தல், பத்திரிகை—புத்தகம் வெளியிடுதல் போன்ற தொழிற்சாலையைச் சேர்ந்த தொழிற்சங்கங்கள்.

6. விவசாயத் தொழிற்சங்கங்கள். அவையாவன: உணவுப்பொருள்களையும், வீடுகளையும் உண்டாக்கும் தொழிற்சாலைகளைச் சார்ந்த தொழிற்சங்கங்கள்.

இப்படிப்பட்ட முக்கியமான தொழில்களின் பெயரில் முக்கியமான தொழிற்சங்கங்கள் பலப்பலவும் உலகம் முழுவதும் இருந்துவருகின்றன. உலக மக்களுக்கு மேற்கூறிய தொழில்கள் யாவும் இன்றியமையாது வேண்டப்படுவனவாகும். ஆதிக்காலங்களில், இ

த் தொழில்கள் யாவற்றையும் முதலாளிக ன்றித் தொழிலாளிகளே, தத்தம் உயிர் வாழ்க்கைக்காக, அந்தந்தச் சிற்றூர்களில் ய்துவந்தனர். ஆனால், மக்களால் தனித் ரியாகச் செய்துவரப்பட்டத் தொழில்கள், றிவியல் அறிவு பெருகப் பெருகக், கூட்டங் ட்டமாகச் சேர்ந்த மக்களால் செய்யப்பட ண்டிய நிலைமைக்கு வந்தன. இந்தக் கூட் ங்கள்தான் தொழிற்சங்கங்கள் என்ற மைப்புகளின்கீழ் வருவதற்கு ஏதுவாக யின.

இன்று உலகம் முழுமையுமே தொழிற்சங் கள் பலப்பல உருவாகி வந்துள்ளன. தாழில் புரிந்துவரும் மக்கள் நல்வாழ்வு வாழ ம், தொழிற்சாலைகளைப படைத்த உரிமை ளர்கள் தங்கள் தொழிற்சாலைகளை வளர்ச்சி றச் செய்யவும், தொழிற்சாலைகளில் உற்பத் யாகும் பொருள்களைப் பொதுமக்கள் தால்லை ஏதுமின்றி நுகரவும் ஆன நிலை மயை உண்டாக்கத் தற்காலத் தொழிற்சங் கள் கடமைப்பட்டுள்ளன. இப்படிப்பட்ட ன்மைகளைத் தொழிலாளர்களும், உரிமை ளர்களும், பொதுமக்களும் முழுமையாக டையவேண்டி நமது கால தொழிற்சங்கங் ள் நடத்தப்படல் வேண்டும்.

நமது தொழிற்சங்கங்கள் உலக மக்களுக்கு தவியாக இருந்துவரவேண்டுமானால், மேலே ண்ட மூன்று கடமைகளையும் சரிவர நடத்தி வேண்டும். இவைகளுக்குரிய கடமைகளைச் வர நடத்தி வருவதைத்தான் தொழிற் க நடத்தைகளென்று (Trade Unionism) ழங்குவர். இந்த நடவடிக்கைகளைவிட்டு னைய நடத்தைகளாகிய மதம், சாதி, அரசி ல் முதலிய நடத்தைகளில் தலையிடுவதனால் ன் தொழிற்சங்க நடவடிக்கைகள் பாதிக் படுகின்றன. தொழிற்சங்கம் முழுக்க முழுக் த் தூய பொருளியல் இயக்கமாகும். இவை ரின் நடத்தைகள் பெரும்பாலும் பொருளி ல் நடத்தைகளை அடிப்படையாகக் கொண் வை. மதத்தையோ, சாதியையோ, அல்லது ரசியலையோ தொழிற்சங்கத்தில் புகுத்து து கூடாது. தனிப்பட்ட சாதி, மத, அரசி ல் நடவடிக்கைகளுக்குத் தொழிற்சங்கத் தப் பயன்படுத்துவதும் கூடாது. அரசியல் ாழ்க்கை வேறு, தொழிற்சங்க வாழ்க்கை வறு என்று ஒவ்வொரு தொழிலாளியும் ருதவேண்டும். தொழிற்சங்கம் அரசியல் ாழ்க்கையில் கலப்பது, தொழிற்சங்கத்திற் புறம்பான நடவடிக்கையாகும்.

தொழிற்சங்க வாழ்க்கைக்கு அரசியல் வாழ்க்கை புறம்பான ஒன்றாயினும், தொழிலாளர்கள் தனித்த முறையில் அவரவர்கள் விரும்பிய அரசியல் கட்சிகளோடு தொடர்பு கொண்டு நாட்டிற்கும், உலகத்திற்கும் பாடு படலாம். ஒரு குறிப்பிட்ட தொழிற்சங்கத்தில் இணைந்துள்ள தொழிலாளர்கள், எத்தனை அரசியல் கட்சிகளில் வேண்டுமானாலும் பிரிந்து நின்று பாடுபடலாம், ஆனால், தொழிற் சங்கம் என்ற அமைப்பின் கீழ் இருப்பதுதான் போற்றத்தகுந்தது. தொழிற்சங்க அமைப் பின் கீழ் வரும்போது எல்லாத் தொழிலாளர் களும், குறிப்பிட்ட தொழிற்சாலையைச் சேர்ந்த தொழிலாளர்கள் என்ற உணர்வில் கூடி, அதற்கான நடவடிக்கைகளில் சேர்ந்து ஈடு பட்டுப், பிரியும்போது யார்யாருக்கு எந்தெந்த அரசியல் கருத்துக்களில் விருப்பம் உண்டோ, அவரவர்கள் அந்தந்த அரசியல் கட்சியின் அமைப்பின் கீழ் இருந்து பாடுபட லாம். நமது நாட்டில் எத்தனையோ அரசியல் கட்சிகள் இருக்கின்றன. ஒரு குறிப்பிட்ட தொழிற்சாலையைச் சேர்ந்த தொழிலாளர்கள் தனிப்பட்ட முறையில் அத்தனை அரசியல் கட்சிகளிலும் தங்கள் தங்கள் விருப்பிற்கேற்ப பிரிந்து நிற்கலாம். ஆனால் தொழிற்சங்கம் என்று வரும்போது எல்லோரும் ஒரே அமைப் பின் கீழ் வரவேண்டும். தொழிற்சங்கம் எந்த அரசியல் கட்சிக்கும் இரையாகிவிடக்கூடாது. ஆனால் எல்லா அரசியல் கட்சிகளின் ஆதர வையும் பெறும்படியான முறையில் வளர வேண்டும்.

நமது நாட்டிலுள்ள தொழிற்சங்கங்கள், தொழிற்சங்கங்களுக்கும் அரசியல் கட்சி களுக்கும் உள்ள வேறுபாடுகளை உணர்ந்து செவ்வனே நடந்துவருமேயானால், தொழிலா ளர்க்கும், தொழிற்சாலை உரிமையாளர்க்கும், பொதுமக்களுக்கும் முழு நன்மை கிடைக்கும் என்பதில் ஐயமேயில்லை!

[இது, சிறந்த அரசியல் பேரறிஞரும் தொழிற் சங்கத் தலைவரும் ஆன தோழர் ம. சிங்கார வேலு பி. ஏ., பி. எல். அவர்கள் 1936 ஆம் ஆண்டு மே திங்களில் வெளிவந்த "புதுஉலகம்" என்ற இதழில் வெளியிட்டக் கட்டுரையாகும். இதில் காணப்படும் கருத்துக்கள் இதுகாறும் திராவிட முன்னேற்றக் கழகம் கொண்டுள்ள கருத்துக்களோடு ஒட்டிவருவதைக் காணலாம்.]

'மன்றம்' சந்தா விபரம்

	உள்நாடு	வெளிநாடு
ஆண்டுக் கட்டணம்	6—0—0	7—8—0
ஆறு திங்கள் ..	3—0—0	
தனி இதழ் ..	0—4—0	0—5—0

விடுதலை வீரன் வாசிங்டன்

உலக வரலாற்றில் மிகச் சிறப்புப்பெற்ற நிகழ்ச்சி, கி. பி. பதினேழாம் நூற்றாண்டில் பிரிட்டிஷ் பேரரசுக்கு எதிராக அமெரிக்காவில் ஆங்கிலேயர்கள் ஆரம்பித்தப் புரட்சியாகும். அந்தப் புரட்சிக்குத் தலைவனாகி, மக்கள் பலத்தை ஒன்றுதிரட்டி, வீரப்போரிட்டு, அதில் ஆங்கிலேயர்களை வீழ்த்தி, வெற்றிக் கொடியுடன் மனித உரிமைகளைப் பறைசாற்றிய வீரன் சியார்ச் வாசிங்டனாகும்.

1732-ல் வர்சீனியாவில் ஒரு நிலக்கிழாருக்கு மகனாக வாசிங்டன் பிறந்தார். நாற்பது வயதுவரை பண்ணைகளைக் கவனிப்பதிலேயே தனது வாழ்வைச் செலவிட்டார். இங்கிலாந்து பிரான்சுமீது போர்தொடுத்தபோது வாசிங்டன் ஒரு போர்வீரனாக மாறினார். போர்முனையில் வாசிங்டன் அறிந்துகொண்ட போர் முறைகள் பிற்காலத்தில் அமெரிக்கப் புரட்சியின்போது நன்கு பயன்பட்டன. யுத்தம் முடிந்ததும் பயிர்த்தொழிலுக்கே திரும்பிவிட்டார்.

குடியேற்ற நாடுகளின் மீது தாய்நாடு (இங்கிலாந்து) கொண்டிருந்த ஆதிக்கத்தால் பிரிட்டிச் அரசாங்கம் இயற்றிய சட்டங்களும் விதித்த வரிகளும் குடியேற்ற நாடுகளின் அரசியல் பொருளாதார உரிமைகளை இழக்கச் செய்தன. இங்கிலாந்துக்கு எதிராக ஆங்காங்கு கிளர்ச்சிகள் ஏற்பட்டன. 1773-ல் போச்டன் துறைமுகத்தில் மூன்று ஆங்கிலேயக் கப்பல்களிலிருந்த சுமார் 75000 டாலர் மதிப்புள்ள தேயிலையைக் கடலில் எறிந்தனர். இந்த நிகழ்ச்சி மற்ற இடங்களிலுள்ள கிளர்ச்சிக்காரர்களுக்கு உணர்ச்சியூட்டுவதாக அமைந்து, புரட்சி மனப்பான்மை வளர்வதற்கு ஏதுவாக இருந்தது.

1774-ம் ஆண்டு செப்டம்பர் திங்களில் பதிமூன்று குடியேற்ற நாடுகளிலுமுள்ள புரட்சிக்காரர்கள் பிலடெல்பியா என்ற நகரில் தமது வருங்கால வாழ்வை நிர்ணயிக்க ஒரு மாநாட்டைக் கூட்டினர். வர்சீனியப் பிரதிநிதியாக வந்திருந்த வாசிங்டன் மாநாட்டுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். சிலர் குடியேற்றநாடுகளை உடனடியாகச் சுதந்திரம் பெறக் குடியரசாக மாற்றவேண்டும் என்று வீர முழக்கம் செய்தனர். ஆனால் பெரும்பான்மையினர், பிரான்சு நாட்டையேத் தோற்கடித்த இங்கிலாந்துடன் போர்புரிவதை விரும்பவில்லை. வாசிங்டன்கூட 'விடுதலை அமெரிக்கா'வை விரும்பாமல், ஒரு சமாதான ஏற்பாட்டையே விரும்பினர்.

மாநாடு முடிவுபெறுவதற்குமுன், ஆங்கி யப் போர்ப்படைகள் போச்டன் நகரைத் தா குவதாக செய்தியொன்று வந்தது. அவ் ளவுதான்! மாநாட்டில் ஆரவாரம் அதிகரி தது! வீணன் வீரனாக மாறினான்! வீரர்க உள்ளங்கொதித்தெழுந்தனர்! புகைந்த எ மலை கனலைக் கக்க ஆரம்பித்தது! வீரர்க கூடினர். "யார் படையின் தலைவர்? யா நியமிப்பது?" வீரர்கள் தேடினர். "அதோ கா வீரர்களின் முழக்கத்திடையே வாசிங்ட படைத்தளபதியானார்.

புரட்சிப் போரின் முதற்கட்டங்கள் வாசிங்டன் சிலபல இன்னல்களை ஏற்கவே டியிருந்தது. ஏர்பிடிக்கும் கைகளில் துப்பாக் அவர்கள் புரிந்துகொள்ள முடியாத பே முறை. போர்க் கருவிகளின் பற்றாக்குறை முதல் ஒன்றரை ஆண்டுகளில் தோல்விக் மேல் தோல்வி! ஆனால் முயற்சி குன்றவில்லை வாசிங்டன் இன்னும் அதிகமான வீரர்களை பழக்கிப் போர்முனையில் நிறுத்தினார்.

1777-ம் ஆண்டு. அமெரிக்கர்களுக்கு அ வாகப் போர்முடிவுகள் மாறத்தொடங்கிய பிரிட்டிச் படை பின்வாங்க ஆரம்பித்த இதற்குள் பிரான்சு நாட்டு உதவியும் அ ரிக்கர்களுக்குக் கிடைக்கவே பிரிட்டிஷ் ப யினரால் சரணடைவதைத் தவிர வேறொ றும் செய்யமுடியவில்லை. 1776-ம் ஆண் டிலேயே அமெரிக்கா சுதந்திர அறிக்கை வெளியிட்டாலும் பிரிட்டிச் அரசு அதை ஒப்புக்கொள்ளவில்லை.

இதற்கிடையில் அமெரிக்காவில் அரசிய அமைப்புபற்றிப் பல கருத்துக்கள் ஏற்பட் வாதப்பிரதிவாதங்கள் செய்யப்பட்டன. க சியாக 1787-ல் ஒரு முடிவுகாண எல்லா மா லங்களும் ஒரு மாநாட்டில் ஒன்றுகூடின வாசிங்டன் பிரதிநிதியாக வந்திருந்தா அவரே மாநாட்டுத் தலைவராகவும் தே தெடுக்கப்பட்டார். அமெரிக்க ஆங்கிலேய குடியேற்ற நாடுகள், "அமெரிக்க ஐக்கியநாடுகள் என்று கூட்டாட்சி முறையில் ஒரு குடியர நாடாக மாறின.

1788-ல் அரசியல் அமைப்புச் சட்டம் இய றப்பட்டது. 1789-ஆம் ஆண்டு ஏப்ரல் 6 நாள் சியார்ச் வாசிங்டன் அமெரிக்க ஐக்கி நாடுகளின் முதல் தலைவரானார். 8 ஆண்டுக பணியாற்றியபின் 1797-ல் வாசிங்டன் இற தார். அமெரிக்க விடுதலைக்கு அரும்பணியா றிய சியார்ச் வாசிங்டனின் நினைவு மக்களிட தில் என்றும் நிலைபெறும்வண்ணம் அமெரி ஐக்கியநாடுகளின் தலைநகரம், வாசிங்ட என்ற பெயர் பெற்றுள்ளது!



(21)

புராணக்காரர் கற்பனைப்படி, தேவலோகத் தில் ஒருவன் புகுந்ததும், அவனைத் தேவ கன் னியர்கள் சூழ்ந்து வரவேற்பார்கள். திலோத் மை எதிர்கொண்டழைப்பாள், மேனகை ங்கம் புளகித்து ஆடிவருவாள், ஊர்வசி ண்டியிட்டுப் பாடுவாள், மோகினி பன்னீர் தளிப்பாள், ரம்பை சந்தனம் பூசுவாள், கலா தி சாமரம் வீசுவாள்! சுற்றிலும் இளமை ருத தேவகன்னியர்கள், சிற்றின்பத்தை ம் பேரின்பத்தையும் ஒருங்கே அனுபவிக்க மைத்திடும் தேவகானம்! தேவலோகம்! ங்கு ஆடலாம், பாடலாம், சோமரசம் பருக ம், சுந்தரவல்லிகளைக் கைப்பற்றலாம், டைசொல்வார் கிடையாது, தண்டிப்பார் ல்லை! அந்தலோகத்துக்கு அரசன் தேவேந் ன், ஆயிரங் கண்ணோன், அகலிகைக் காத ல் கிடைத்த பரிசு! அத்தகைய இந்திரனை ரசனைகப் பெற்ற இந்திரலோகம் எப்படி ருக்கமுடியும்? காமத்திற்குச் 'சர்வ உரிமை ம்' அந்த லோகத்தில் இருந்தன!

காமவெறி தலையாடும் அந்த உலகத்தைத் ன் ரம்பைகளும், ஊர்வசிகளும், சுந்தரி ளும், சொகுசுக்காரிகளும் நிறைந்த உலகைத் ன், புராணிகர் வருணிக்கிறார், அந்த லகை அடையவேண்டுமானால், "தானஞ் ய்!" "யாகஞ்செய்!" என்று கூறி, தங்க டைய இந்திர உலகை இங்கு உண்டாக்கிக் காள்ள முயல்கின்றனர்.

அக்னி தேவன்

அண்டசராசரங்களிலும் உள்ள நெருப்புக்கு தல் இடமாக, அக்னிதேவன் சிருஷ்டிக்கப் டிருக்கிறான்.

புராணங்களில், அக்னிதேவனின் தந்தை ன்று இரண்டு பெயர்கள் கூறப்படுகின்றன. விச்வாநரன் என்பவரின் குமாரன் அக்னி என்று ஒரு புராணம் சொல்கிறது. மற்றொரு புராணத்தில், பிரசாபதி என்பவனுடைய குமாரன் அக்னி என்று கூறப்படுகிறது. இவன், தான் செய்த தவத்தின் பயனால் உயர் பதவி அடைந்தானும்.

அக்னி தேவனுக்கு, இரண்டு முகம், ஏழு நாக்குகள், நான்கு கொம்புகள், மூன்று கால் கள் என்று புராணக்காரர் படம்பிடித்துக் காட்டுகிறார்.

அக்னி சிறுவனாக இருந்து, விளையாடிக் கொண்டிருக்கும்பொழுது, அந்தப்பக்கம் கல கப்பிரியர் நாரதமுனிவர் வந்தாராம். அக் னியைப்பார்த்ததும், "ஆகா! இந்தச் சிறு வன் பன்னிரண்டு வயதுக்குமேல் இறந்துவிடு வான்" என்று சோதிடம் சொலிவிட்டுப் போய்விட்டார். இதைத் தந்தை மூலம் தெரிந்துகொண்ட அக்னி, தன் விளையாட்டு களை விட்டுவிட்டுக், காட்டிற்குப்போய்ச் சிவ பெருமானை நோக்கி அகோரத் தவம்செய்ய ஆரம்பித்தான்.

அக்னி செய்யும் தவத்தைப் பார்த்ததும் சிவபெருமானுக்கு, வரந்தரவேண்டுமென்ற எண்ணம் பிறந்தது. ஆனாலும் அவர் உடனே கொடுத்துவிடவில்லை. பக்தனைச் சோதிக்க வேண்டுமென்ற எண்ணம் சிவபெருமானுக் குத் தோன்றியது. அக்னி உண்மையில் தன்னைப்பற்றிதான் தவஞ்செய்கிறானா அல் லவா என்று பரிசீலனை செய்ய முற்பட்டார்.

சிவபெருமான் இந்திரன்போல வேடந் தாங்கித், தவஞ்செய்யும் அக்னிமுன் வந்து "உனக்கு என்ன வரம் வேண்டும்?" என்று கேட்டார்.

"நீர் யாரோ?" என்று சிறுவன் கேட் டான்.

"நான்தான் இந்திரன் தேவலோகத்து அரசன்! உனக்கு வேண்டிய வரங்களைக் கேள் தருகிறேம்!" என்று மாய இந்திரன் கேட்டார்.

"நீ ஒன்றும் திரவேண்டாம். நான் சிவ பெருமானை நோக்கித் தவம்செய்கிறேன்! சிவ பெருமானிடம்தான் என் வரத்தைக் கேட் பேன்!"

மாய இந்திரன் தன்னுடைய வச்சிராயு தத்தை எடுத்து வீசப்போக, சிறுவனை அக்னி சிவபெருமானை மனதில் நினைத்து நிற்க, சிவபெருமான் அக்னியின் தவத்தை மெச்சி, மாயவேடத்தைக் கலைத்துத் தன்னுரு வைக்காட்டி, இறவா வரத்தையும், எட்டு திக்குகளில் ஒன்றையும் அவனுக்குத் தந்து விட்டுப் போனுர்.

தேவர்கள் அமிர்தத்தைத் தேடியெடுத்த பொழுது, உண்டதுபோக மிகுந்திருக்கும் அமிர்தத்தை யாரிடம் கொடுப்பது என்று யோசித்தார்கள். அமிர்தம் மிகக் குளிர்ச்சி யானது, அதைத் தாங்கிக்கொள்ளும் சக்தி தேவர்களில் பலருக்கு இல்லாமலிருந்தது. மிகக் குளிர்ச்சியான அமிர்தத்தை, மிகமிக வெப்பமான அக்னிதான் தாங்கமுடியும் என்று நிச்சயித்து, அக்னியைக் கூப்பிட்டார்கள். அப்படித் தாங்கமுடியாது என்று பயந்து, அக்னி யாருக்கும் தெரியாமல் தண்ணீரின் அடியில்போய் உட்கார்ந்துகொண்டான்.

தேவர்கள் அக்னியை எங்கும் தேடினுர்கள். தேவலோகத்தில், திக்குகளில், அரம்பையர் உலகில், எங்குதேடினுலும் அக்னி கிடைக்க வில்லை.

அக்னியைத்தேடிவந்த தேவர்களில் ஒருபகு தியினர் ஒரு குளத்தின்பக்கம் வந்தனர். மற்றக் குளத்திலிருப்பதைப்போலில்லாமல் அந்தக் குளத்திலிருந்த மீன்கள் ஓரிடத்தில் துள்ளிக் குதித்துக்கொண்டிருந்தன. கீழிறங்கிப் பார்த் தால் அக்னி ஒளிந்திருப்பது தெரிந்தது. உடனே அக்னியைப் பிடித்துவந்து, அமுதத் தைச் சுமக்கச்செய்தார்கள். அதற்கு வேண் டிய வலு அவனிடமில்லாததால், அக்னி தவஞ்செய்து வலிவடைந்து, அமுதத்தைச் சுமக்கும் ஆற்றலைப் பெற்றுன்.

தான் ஒளிந்திருந்தபோது தன்னைக் காட்டிக் கொடுத்த மீன்களிடம் அக்னிக்குக் கோபம் வந்தது. "நீங்கள் தூண்டிலில் அகப்பட்டு இறந்துபோவீர்களாக!" என்று மீன்களுக் குச் சாபம்கொடுத்தான். மீன்கள் செய்த உத வியைப் போற்றி, "எங்களைப்போலவே உங்க ளுக்கும் இமையா விழி இருக்க!" என்று தேவர்கள் வரந்தந்தனர். தேவர்கள் தந்த வரத்தால், மீன்கள் இமைக்காமல் தண்ணீரில் உலவுகின்றன. அக்னி தந்த சாபத்தால் தூண்டிலில் போட்டால், அதில் அகப்பட்டு இறந்துபோய்விடுகின்றன. அக்னி தண்ணீ ரில் ஒளிந்துகொண்ட காலத்துக்குமுன்பு மீன்கள் இமைத்துக்கொண்டு உலவியிருக்க வேண்டும், தூண்டில் போட்டால் தப்பி கொண்டுபோகும் ஆற்றல் இருந்திருக்க வேண்டும். இது எந்த அளவு உண்மை, எப் பொழுது நடந்தது புராணக்காரருக்கும் தெரி யாது.

அக்னிக்குச் சுவாகதேவி என்பவள் மனைவி யாகக் கிடைத்தாள். "கிடைத்தாள" என்று ஏன் சொல்லப்படுகிறது என்ருல், காய், கனி களைப்போல பெண்கள் கிடைக்கும்பொழுது பறித்துக்கொண்டுவரும் இயல்புதான் தேவர் களிடத்தில் பெரும்பாலும் இருந்தது. அந்த விதியிலிருந்து அக்னிதேவன் மாறிப்போக வில்லை.

தட்சனுக்கு சுவாகா என்ற பெண் இருந் தாள் அவள் அதிருபவதியாய், நந்தவனத் தில் உலவிக்கொண்டிருக்கையில், எமதர்மன் எருமைக்கடா வாகனத்தில் ஏறி அந்த வழி போய்க்கொண்டிருந்தார். தட்சனுடைய தோட்டத்தில், ஒரு மாந்தளிர் உலவிக்கொண் டிருப்பதைக்கண்டு, தனது வாகனத்தை நிறுத்தி, தோட்டத்தினுள் நுழைந்தார்.

சுவாகாவின்முன் மண்டியிட்டு, யமன் தன் காதலை வெளியிட்டான். இறப்புக்குத் தலைவ னை யமன்—எவரும் கண்டு அஞ்சும் தேவாதி தேவன் தன்முன் மண்டியிட்டிருப்பதை பார்த்து, சுவாகா புன்னகை செய்தாள். புன் னகையைக் கண்டதும், யமன் புலிபோலா னுன். மான், "காந்தருவமணத்தில்" பலியா னது. சுவாகா வருத்தப்படவில்லை, கன்னிப் பருவத்தில் கற்பிழந்ததைப்பற்றிக் கவலைப் படவுமில்லை. ஆனுல், மீண்டும் தந்தையின் மாளிகையினுள் எப்படிச் செல்வது என்று யோசித்தாள்.

யமன், சுவாகாவை விட்டுப் பிரிந்துபோக மனமில்லை. அவளைத் தன்னுடன் அழைத் துப்போக துடித்தான், எருமைக்கடாமீது இருவரும் அமர்ந்து போய்விடலாம். ஆனுல் யாரும் பார்த்துவிட்டால்—அதுவும் எருமைக் கடா போகிற வேகத்துக்கு, எல்லோரும் பார்த்துவிடுவார்கள். என்ன செய்யலாம் என்று யோசித்துக் கடைசியாக, 'யாருக்கும்

தெரியாமல் சுவாகாவை எடுத்துப் போகும் ர்க்கத்தை யமன் கண்டுபிடித்தான்.

"சுவாகா; என் சொர்ணமே! என் அரு வா!" என்று அவள் கையைப் பற்றி, மந்திரத்தைச் சொல்லி நீ ஒரு எலுமிச்சம் மாக ஆகுக!" என்று யமன் சொன்னான். டனே பாவை நின்ற இடத்தில் ஒரு எலு சம்பழம் கிடந்தது. அந்தப் பழத்தை த்து வாயில் போட்டு அப்படியே விழுங்கி ட்டு, யமன் எருமைக்கடாமீது ஏறி தன் ருப்பிடம் போனான்.

இரவு நேரம் வந்தது. யமன் பஞ்சணையில் மர்ந்து, தான் விருங்கிய பழத்தை வெளியே ிழ்ந்தான். அந்தப் பழத்தின்மீது மீண் ஒரு மந்திரத்தை உச்சரித்து, அதைப் ண்ணாக்கினான். தூக்கத்திலிருந்து விழிப் னைப்போல, சுவாகா எழுந்து, சுற்றிலும் ச்சரியத்துடன் பார்த்தாள். அவள் இருந் து, தன் தந்தை மாளிகைக்குப் பின்னுள்ள ாட்டத்தில்; இப்பொழுதோ முன்பின்னறி த மாளிகையில், சப்ரகூட மஞ்சத்தில் வளைத் தேற்றி, அவள் அங்கு வந்த விதத் தக் கூறினான்.

இரவு கழிந்ததும், யமன் சுவாகாதேவியை ண்டும் பழமாக்கி விழுங்கிவிட்டு, தன்னு டய தர்பாருக்குச் சென்று, சித்ரகுப்தன் னக்குகளை ஒப்பிக்க, பூலோகத்திலிருந்து தவர்களின் குற்றங்களை விசாரித்தான்.

பகலிலே கனியாக, இரவு நேரத்தில் கன்னி க, சுவாகா காலங்கழித்தாள். தட்சன் மாளி யில், சுவாகா திடீரென்று மறைந்தது ச்சரியமாக யிருந்தது. எங்கும் தேடி லுத்துவிட்டார்கள். ஆனால் அவள் றந்த மாயம் விவரிக்கமுடியாத புதிராக ந்தது.

யமன் மிகுந்த பாதுகாப்புடன், பாவையைப் மாக்கி, பழத்தைப் பாவையாக்கி ருசிகண்டு தான். சிலகாலம் சென்றபிறகு, இரவு ங்களில் மட்டுமல்லாமல், பகலில்கூட பாரைவிட்டு வந்ததும், தனித்திருக்கும் ளைகளில், பழத்தைச் சுவாகாதேவியாக்கி, மச்சுவையை சுவைத்தான். யமனுக்குக் ம நினைவு தோன்றும்பொழுதெல்லாம், மிச்சம்பழம், எலுமிச்சம்பழ நிற ஏந்திழை னள். அவன் இச்சை தீர்ந்ததும், மீண்டும் வள் பழமாக ஒடுங்கிப்போனாள்.

ஒருநாள் நந்தவனத்தில் உலவவந்த யமன், நவிக்கரையோரத்தில் அமர்ந்து அங்குள்ள ற்கை எழிலைசிறிதுநேரம் ரசித்துக்கொண் டிருந்தான். அப்பொழுது சுவாகாவின் நினைவு வர, மெதுவாகச் சுற்றிலும் பார்த்து யாரும் இல்லையென்று நிச்சயித்துக்கொண்டு, பழத்தை வெளியே உமிழ்ந்து, அதைப் பெண் ணாக்கினான். சுவாகாதேவி வந்தாள். அவள் கையைப்பற்றி இழுத்துக்கொண்டு அந்தத் தோட்டத்தில் சற்று மறைவான செடிக ளடர்ந்த இடத்துக்கு யமன் சென்றான்.

காமவெறி தீர்ந்ததும், களைப்பு மிகுதியால் யமன் அந்த சருகுமெத்தையில் அயர்ந்து உறங்கிவிட்டான். தனியாக இருந்த சுவாகா தேவி எழுந்து, தோட்டத்தில் உலவிவந்தாள். யமன் கையில் சிக்கியதற்குப்பின் அவளுக்குத் தனியாக உலவி வருவதற்கான வாய்ப்புகள் கிடைத்ததில்லை. அவன் வேண்டும்போது மட்டும் மங்கை உருவில்; பின்பு பழ உருவில், நீண்ட உறக்கம்! ஆதலால், இப்பொழுது உலவி வர சிறிது அவகாசம் கிடைத்ததும், சுவாகா மிகுந்த குதூகலத்துடன் தோட்டத் தில் அங்குமிங்கும் ஓடிவிளையாடினாள். பாடிக் கொண்டு, அங்குள்ள மலர்களைக் கொய்து, அழகுபடுத்தினாள்.

ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்தும், மான் போலத் தாவிவந்த சுவாகா திடீரென்று கட் டுண்டவள்போல நின்றாள், அவள் கண்கள் இமைகொட்டாது பார்த்துக்கொண்டிருந்தன, எதிரே வரும் ஒரு ஆடவனை!

அவன் தோற்றமும், நடையும்! அவனைப் பார்த்தால் தேவர்களில் ஒருவன்போலத் தோன்றியது! அவன் அழகு சொல்லிமுடி யாது! நிறம் பொன்னொளியாக இருந்தது.

சுவாகா விழுங்கிவிடும் கண்களுடன் அவ னைப் பார்த்துக்கொண்டிருந்தாள். அவன் இவள் நிற்பதை முதலில் பார்க்கவில்லை. அவன் தன்னைக் கடந்து சென்றுவிடுவான் போலிருந்தது. சுவாகா சற்று முன்வந்து, "தாங்கள் யாரோ!" என்று குளிர்மையுடன் கேட்டாள்.

குரல்கேட்டு, வந்தவன் விழித்துப் பார்த்து நின்றான். அப்பொழுதுதான் பெண்ணொருத்தி நிற்பது அவனுக்குத் தெரிந்தது. "நான் அக்னிதேவன்!" என்று தன் வழியே போக அடியெடுத்துவைத்தான். ஒரு சந்தேகம் வந்தது. திரும்பிப்பார்த்தான். அவள்— பார்ப்பதற்கு அவளும் அழகாக இருந்தாள்— தன்னைப் பார்த்தபடி இருப்பதைக் கண்டான். அவள் புன்னகை செய்தாள்.

"ஆகா! எதிர்பாராத விருந்து!" என்று மனதில் மகிழ்ச்சியுடன் நிச்சயித்துக்கொண்டு,

அவனைத் தன்னுடன் அழைத்துக்கொண்டு சற்றுதூரம் அக்னிதேவன் நடந்தான். மரங்கள் அடர்ந்த இடத்தில், இருவரும் அமர்ந்தனர்; கொஞ்சி விளையாடினர். சருகுகள் சலசலத்தன.

வேரூர்புரத்தில். தூக்கத்திலிருந்து யமன் விழித்தான். பக்கத்தில் சுவாகாதேவியைக் காணோம். பதறிப்போய் எழுந்து. " சுவாகா! சுவாகா!" என்று கூப்பிட்டான், பதில் வரவில்லை. சுவாகாவைத் தேடிக்கொண்டு அவன் புறப்பட்டான்.

" சுவாகா!" என்ற குரல் கேட்டு, சுவாகா அச்சத்துடன் எழுந்து உட்கார்ந்தாள்.

" ஏன்? யாரது உன்னைக் கூப்பிடுவது?" என்று அக்னி கேட்டான்.

" யமன்!"

" யமனா?" நடுக்கத்துடன் அக்னி எழுந்தான். " அவர் ஏன் உன்னைத் தேடுகிறார்?"

" அவர் வசத்தில்தான் நான் இப்பொழுது இருக்கிறேன்!"

" ஐயோ! இதை ஏன் முன்னமே நீ சொல்லவில்லை?" என்று அக்னி கையைப்பிசைந்து கொண்டான. " இது தெரிந்தால், எமதர்மன் என்னை என்னபாடுபடுத்துவானோ, சொல்ல முடியாது!"

இதற்குள் " சுவாகா!" என்று குரல் சற்று அருகில் வந்துகொண்டிருப்பது கேட்டது.

" ஐயோ! வந்துவிட்டார்! என்ன செய்வது?" அக்னி வாய்குழறினான்.

" அஞ்சவேண்டாம்! என் அன்பே!" என்று சுவாகா அக்னியின் கரத்தைப் பற்றி, தன்னைப் பழமாக்குவதற்கு யமன்கூறிடும் மந்திரத்தைச் சொன்னாள். உடனே அக்னி ஒரு எலுமிச்சம் பழமாகக் குறைந்துவிட்டான். சுவாகா அந்தக் கனியை எடுத்து விழுங்கிக் கொண்டாள்.

யமன் வரும்பொழுது, சுவாகா அங்கு சிதறிக்கிடந்த மலர்களைப் பொறுக்கிக்கொண்டிருந்தாள்.

" நான் எங்கெங்கோ தேடிவந்தேன். நீ இங்குதானா இருக்கிறாய்?" என்று யமன் அதட்டினான்.

" ஆமாம், பிரியபதே!" என்று சுவாகா கொஞ்சினாள்.

தி. மு. க. புதிய பொதுக்குழு

24-4-54-ல் சென்னையில் நடைபெற்ற தி. மு. க. புதியபொதுக்குழுவின் முதற் கூட்டத்தில் தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் கழகத்தின் பொதுச்செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

திருச்சியில் நடைபெற இருக்கும் மாநில மாநாட்டின் திறப்பாளராகத் தோழர் ஜி. சோமசுந்தரம் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

வரவேற்புக் குழுவில், கீழ்க்கண்டவர்கள் பணிபுரிய தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றனர்.

வரவேற்புக்குழுத் தலைவர்: அம்பில் தர்மலிங்கம்.

செயலாளர்கள்: திருச்சி எம். எஸ். மணி, மதுரை எஸ். முத்து.

பொருளாளர்: அறிஞர் அண்ணாதுரை அவர்கள்.

தொண்டர்படைத்தலைவர்: ஐ. எம். ஷெரீப்.

பந்தல்குழு: எஸ். ஏ. ஜி. ராபி, டி. மூர்த்தி, பண்ணை முத்துகிருஷ்ணன், நடராசன்.

விளம்பரக் குழு: டி. பி. அழகமுத்து, பராங்குசம், அரங்கண்ணல், எஸ். நெடுமாறன்.

கலைக் குழு: அறிஞர் அண்ணாதுரை, கருணாநிதி, எம். ஜி. இராமச்சந்திரன், ஆர். இராமசாமி.

தீர்மானக்குழு: ஈ. வெ. கி. சம்பத், வி. நடராசன், கே. ஏ. மதியழகன், ஏ. வி. ஆசைத்தம்பி.

" வா! போகலாம்! நேரமாகிவிட்டது" என்று யமன் சுவாகாவின் கையைப்பற்றி மந்திரத்தைச் சொன்னான். அவள் ஒரு எலுமிச்சம்பழம் உருவமானாள்.

அக்னியை எலுமிச்சம்பழமாக்கி சுவாகா விழுங்கினாள். சுவாகாவை எலுமிச்சம்பழமாக்கி யமன் விழுங்கினான்.

அக்னியை விழுங்கிய சுவாகா, சுவாகாவை விழுங்கிய எமதர்மன்—இவர்களையெல்லாம் தாங்கிக்கொண்டு எருமைக்கடா புறப்பட்டது எமபுரியைநோக்கி. (தொடரும்)

மறு பரிட்சை

[இரா. செழியன்]

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

ஹெட் : என்னடாது, பள்ளிக்கூட பையனும் இல்லே, பையனுடைய அப்பாவும் இல்லே, அப்படியென்றால் வேறு யாராக இருக்க முடியும்? ஒருவேளை, இன்ஸ்பெக்டர் ஆப் ஸ்கூல்ஸ் வந்திருப்பாரோ! (அவசரமாகக் காலைக் கிழே போட்டு பித்தான்களை மாட்டிக்கொண்டு, மேஜைமேலிருந்த தலைப்பாகையை எடுத்து வைத்துக் கொண்டு) இது பிரைவேட் மானேஜ் மெண்ட் ஸ்கூல். அவன் ஏதாவது சரியா ரிபோர்ட் எழுதலேன்னு, வருகிற கிராண்டில் மண் விழுந்துடும். டேய்! அவர் முகத்தைப் பார்த்தால், புத்திசாலியாத் தெரியுதா, இல்லே அசடு வழியுதா?

பியூன் : முகத்தில் கொஞ்சம் புத்திசாலித் தனம் தெரிகிறது!

தலைமை : (தலைப்பாகையை கழற்றிவைத்து, கோட்டைத் தளர்த்தி) அப்படியானால், அவர் நிச்சயமாக நமது இன்ஸ்பெக்டர் ஆப் ஸ்கூல்ஸாக இருக்கமாட்டார், போய் அவரை வரச்சொல்!

[பியூன் போகிறான். முத்து உள்நுழைகிறான். முத்து வணக்கஞ்செய்கிறான்.]

தலைமை : (எழுந்து வணக்கஞ்செய்து) உட்காருங்க! என்ன செய்யணும்?

முத்து : நான் முத்துவுங்க. முழுப்பேர் முத்துக்குமாரசாமி!

தலைமை : அப்படிங்களா!

முத்து : என்னைப்பற்றி ஞாபகமில்லிங்க?

தலைமை : இல்லிங்களே! மன்னிக்கணும்!

முத்து : அடையாளந் தெரியாதபடி மாறி விட்டேனு? என்ன சார், அப்படி விழிக்கிறிங்க! உங்க பள்ளிக்கூடத்து ரிஜிஸ்டரை 1936 லிருந்து 1943 வரை எடுத்துப் பார்த்தா என்பேர் தெரியும்!

தலைமை : அப்படியா?

முத்து : என்பேர் முத்து. ரிஜிஸ்டரில் முத்துக்குமாரசாமி என்றிருக்கும்!

தலைமை : இருக்கலாம்!

முத்து : உங்களுக்குக் கொஞ்சங்கூட ஞாபக மில்லையா? பத்து வருஷத்துக்கு முன்னே இந்தப் பள்ளிக்கூடத்தில் நான் படிச்சேன். (சுவற்றைப் பார்த்து) அதோ! அந்த குருப் போட்டோவில் நாலாவது வரிசையில் ஐந்தாவது பையன் நான் தான்!

தலைமை : இந்தப் பள்ளிக்கூடத்துப் பழைய மாணவனு? அப்படிச் சொல் ரொம்ப சந்தோஷம்! (உட்கார்ந்துகொண்டு) ஏதாவது சர்டிபிகேட் வேண்டுமா?

முத்து : இனிமேல் ஒரு சர்டிபிகேட்டும் வேண்டாம். இருக்கிற சர்டிபிகேட்டைக் கொடுத்துவிட்டுப் போகத்தான் வந்தேன்!

தலைமை : சரி!

முத்து : சார்! உங்கள் பள்ளிக்கூடத்தில் பத்து வருஷத்துக்குமுன் ஏழுவருஷம் படிச்சேன்! அப்போ கட்டின சம்பளப் பணத்தை யெல்லாம் திருப்பித் தாங்க!

தலைமை : பத்து வருஷத்துக்குமுன் நீ கட்டின சம்பளப்பணத்தையெல்லாம் திரும்பத் தருவதா?

முத்து : ஆமாம்! நான் கொடுத்த சம்பளப் பணத்தையெல்லாம் திரும்பத் தாங்க! சார்! நான் பணக்காரவீட்டுப் பையனுக இருந்தால், கொடுத்த பணத்தைத் திரும்பக் கேட்காமல் போய்விடுவேன். நான் ஏழைப் பையன். எனக்குப் பணம் வேண்டும்?

தலைமை : நீ சொல்வதே புரியவில்லையே!

முத்து : என்னுடைய ஹெட்மாஸ்டர்தானே!

உங்களுக்கு எங்கே புரியப்போவுது! (அழுந்தந் திருத்தமாக) ஏழு வருஷம் உங்க பள்ளிக்கூடத்தில் நான் கொடுத்த சம்பளப்பணத்தையெல்லாம் திரும்பக் கேட்கிறேன். புரிகிறதா?

தலைமை : ஏன் திரும்பக் கேட்கிறாய்?

முத்து : ஏனென்றால் நான் கொடுத்த பணத்திற்குத் தகுந்த படிப்பு எனக்குச் சொல்லித்தரவில்லை, தகுந்த பலன் கிடைக்கவில்லை! எனவே கொடுத்த சம்பளப் பணத்தைத் திரும்பத் தாருங்கள்!

தலைமை : செலுத்திய சம்பளப் பணத்தைத் திரும்பத் தருவதா? இதற்குமுன் யாரும் கேட்டதேயில்லை. முட்டாள்தனமான கேள்வி!

முத்து : இவ்வளவு நாளும் முட்டாள்தனமாகத்தான் நான் பேசாமல் இருந்தேன் இப்பொழுது கொஞ்சம் புத்தி வந்தது. அதுவும் அந்த மாணிக்கம் சொல்லித் தந்ததால்!

தலைமை : மாணிக்கமா? யாரது, அந்த அதிமேதாவி?

முத் : அவன்தான் சொன்னான், "நீ படித்த படிப்பு பிரயோஜனமில்லை, உனக்கு ஒன்றுமே தெரியலை, கொடுத்த பணம் பாழ்!" அதைக் கேட்டதும், நேராக இங்கு வந்தேன்! அந்த மாணிக்கம் யாருன்னு கேட்கிறீங்களா? அவனும் இதே பள்ளிக்கூடத்தில் என்னுடன் படிச்சவன்தான்! நான் பத்தாவது படிக்சு பாஸ் செய்தேன்! அவன் பெயில் ஆயிட்டான்! ஆனால் பலன் என்ன? பாஸ் செய்த நான் தெருத்தெருவாக வேலைக்கு அலையறேன்! எதுக்கும் லாயக்கில்லாதவனாக ஆயிட்டேன்! அவன் பெயிலானான், ஆனால் நல்ல வியாபாரத்தில் ஈடுபட்டு, வாழ்க்கையில் நல்லாயிருக்கிறான்! என்ன அர்த்தம்? நீங்க கொடுக்கிற பாஸ்-பெயிலுக்கு நேர் மாறுதலான காரியம் நடக்கிறது. உங்கள் சர்டிபிகேட்டால் ஒரு பலனும் இல்லை, இந்தாங்க! உங்க சர்டிபிகேட் புத்தகம், T. C. காண்டக் சர்டிபிகேட், கண்ணாவிச் சர்டிபிகேட் எல்லாம்! என் பணத்தைத் திருப்பித்தாங்க!

தலைமை : இதுமாதிரி யாரும் இதற்குமுன் கேட்டதேயில்லை! வேடிக்கைக்காக நீ கேட்கிறாயா?

முத்து : (சற்றுக் கோபத்துடன், ஏளனத்துடன்) எங்கவீட்டுக் குழந்தை, உங்களோடு வேடிக்கை செய்யறதுக்கு! சார் பணத்தைத் திருப்பித் தருகிறீர்களா இல்லை உங்க மானேஜ்மெண்ட்மேல் பிராது போட்டு வசூல் செய்யட்டுமா நமது கல்வி மந்திரிக்கும் ஒரு மனுப் போட்டு வைக்கட்டுமா? என்னிடம் பணத்தை மட்டும் எவ்வளவு கண்டிப்பா வாங்கினீங்க! பதினைந்தாம் தேதிக்குள் கட்டிடணும் இல்லைன்னா ஒரணா பைன் ஐந்து நாளாயிட்டா இரண்டணா பைன் பணத்தை மட்டும் கணக்கா வாங்கினீங்களே, நல்ல படிப்பு சொல்லித்தரலியே நீங்கள் சொல்லிக்கொடுத்ததை வைத்துக்கொண்டு என்னபண்ண முடிஞ்சுது நீங்க எவனைப் பார்த்து, "கெட்டிக்காரன் பரிட்சையில் தேறிவிட்டான்" என்று வெளியே அனுப்புகிறீங்களோ, அவன் முட்டாளாக, ஒன்றும் உதவாக்கரையாக இருக்கிறான்! எவன் உங்களிடம் பெயிலாகிப்போகிறானோ அவன் நல்லா, கெட்டிக்காரனா, சமர்த்தா இருக்கிறான். என்ன அர்த்தம்?

தலைமை : நீ சொல்லுகிறது சரிதான்! இப்போ போய்விட்டுவா! உனக்கு எங்கே யாவது வேலை கிடைக்குமான்னு பார்த்து வைக்கிறேன்!

முத்து : அந்தப் பாச்சாதான் நம்மிடம் பலிக்காது. (நின்றுகொண்டிருந்தவன் உட்கார்ந்து) பணத்தை பைசாமாத்தி வைத்தால்தான் நான் போவேன். நான் படிச்ச படிப்பு பிரயோஜனமில்லை, அதை வைத்துக்கொண்டு என்னால் எதுவும் செய்ய முடியாது!

தலைமை : உன்னால் எதுவும் செய்யமுடியாதுன்னு ஏன் நினைக்கிறே?

முத்து : ஏன் நினைக்கிறேனா? போன பத்து வருசமா நான்பட்ட பாடு எனக்கல்லவோ தெரியும்! வேலை கிடைக்கிறதில்லை கிடைச்சாலும் அது நிலைக்கிறதில்லை உங்க பள்ளிக்கூடத்தில் ஏழு வருசம் படிச்சதைவிட, அந்த மாணிக்கத்திடம் ஏழுநாள் படிச்சிருந்தால் எவ்வளவோ நல்லாயிருந்திருக்கும்! நீங்களுந்தான் சொல்லிக்கொடுத்தீங்க, ஒரு ரூபாய்க்கு 16 அணா, ஒரு அணாவுக்குப் 12 தம்பிடின்னு, அவன் பாருங்க, கடலை விலை மூணு தம்பிடி குறையுது முப்பதினாயிரம் ரூபாய் லாபமுன்னு சொன்னான்! என்

சார் வீணுப் பேசனும்! நீங்க சொல்லிக் கொடுத்த படிப்பால் எனக்குப் பலன் இல்லே. அதனுல் நான் ஒன்றும் தெரிந்து கொள்ளவில்லே!

லமை: ஒன்னுந் தெரிந்துகொள்ளவில் லேயா? படிச்சு, கடைசியாக வைச்ச பரிட்சையில் பாஸ் செய்திருக்கிறே!

த்து: நான் ஒன்னும் கத்துக்கொள்ள வில்லே, எனக்கு ஒன்னும் தெரியாது! பரிட்சைன்னு ஏதோ 'குல்மால்' பண்ணி என்னே வெளியே அனுப்பிச்சிட்டிங்க, இவன்கிட்ட ஏழுவருஷம் வசூல் பண்ணி யாச்சு, இவன் இடத்தில் இன்னெருத் தன் வருவான்னு! வேண்டுமானுல் மறு படியும் பரிட்சை வைத்துப் பாருங்க, ஏதாவது தெரியுதான்னு?

லமை: மறுபடியும் பரிட்சையா?

த்து: ஆமாம்! புதுக்கடிகாரம், ஒன்னே வாங்கிட்டுப்போருேம். கடைத்தெருவை விட்டுப் போறதுக்குள் கடிகாரம் ஒடலே! என்ன செய்யருேம், கடைக்காரனிடம் கொண்டுபோய்க்கொடுத்து, "என்னப்பா, கடிகாரம் மோசமா இருக்கு? சரியா இருக் கான்னு பாரு, இல்லேன்னு பணத்தைத் திருப்பித்தா" என்கிருேம்! அதைப் போலத்தான், நீங்க என்னே 'கெட்டிக் காரன், எல்லாம் தெரிந்தவன்' என்று சர்டிபிகேட் கொடுத்து அனுப்பிச்சிங்க! வெளியே 'எதுக்கும் லாயக்கற்றவன் ஒன் னும் தெரியாதவன்' அப்படின்னு திருப்பி அனுப்புருங்க! உங்க சர்டிபிகேட், இதோ, இருக்கு! என் பணத்தைத் திருப்பித் தாங்க! அவ்வளவுதான்!

லமை: மறுபடியும் பரிட்சை வைத்துப் பார்ப்பதா? மற்ற வாத்தியார்களேயும் கேட்டுச் சொல்லுகிறேன். நீ கொஞ்சம் வெளியே போய் இரு!

து: எல்லா வாத்தியார்களேயும் கூப்பிட்டு, என்னேப் பரிட்சைசெய்து ஏதாவது தெரியுதான்னு பார்த்துக்கொள்ளுங்க! சீக்கிரமா செய்யனும்! இந்தப் பள்ளிக் கூடத்தில் பணத்தைப் பாழாக்கினது போதாதுன்னு நேரத்தையும் பாழாக்க முடியாது! (போகிருன். தலைமை ஆசிரி யர் மணியடிக்கிருர். பியூன் வருகிருன்)

லமை: போய், டீச்சர்ஸ் ரூமில், தமிழ் வாத் தியார் தணிகாசலம் பிள்ளே, கணக்கு வாத்தியார் கந்தசாமி, இஸ்டரி ஏகாம் பரம், சயன்ஸ் சடகோபன், பூகோளம் பூவராகம் இவ்வளவுபேரையும் அர்ஜண் டாக நான்கூப்பிடறேன்னு கூப்பிட்டுவா!

[பியூன் போகிருன்]

தலைமை: மிக வேடிக்கையான, பார்க்கப் போனுல், முட்டாள்தனமான கேள்வி, சம்பளப் பணத்தைத் திரும்பத்தா' என் கிறது! ஆனுல் அவன் சொல்றதிலும் கொஞ்சம் நியாயமிருக்கு! கல்விமுறையை எப்படி மாற்றினுல் நல்லது? ஐயோ! அப்பா! நமக்கேன் இந்தக் கேள்வியெல் லாம்! பெரிய பெரிய மந்திரிகளே இந்தக் கேள்விக்குப் பதில் சொல்லப்போய், ஆனைப்பட்டவங்களெல்லாம் தானம் போட்டுட்டு போயிட்டாங்க! நமக்கேன், அதெல்லாம்!

[தமிழ் வாத்தியார் தணிகாசலம் வரு கிருர்.]

தலைமை: வாங்க தமிழையா! உட்காருங்க!

தமிழ்: என்ன, கூப்பிட்டீங்களாம்! மந்திரி களேப்பற்றி பேசிக்கொண்டிருந்தீர்கள்? யாராவது மந்திரி நமது பள்ளிக்கு வரப் போகிருரா? ஒ! அழைப்பிதழ் எழுத வேண்டுமா?

தலைமை: மந்திரி யாரும் வரவில்லே! நமது நாட்டு மன்னரில் ஒருவன் வெளியே காத் துக்கொண்டிருக்கிருன்!

[கணக்குவாத்தியார் கந்தசாமி, இஸ்டரி வாத்தியார் ஏகாம்பரம், சயன்ஸ் வாத்தி யார் சடகோபன், பூகோள வாத்தியார் பூவராகம் வருகிருர்கள்.)

தலைமை: எல்லோரும் உட்காருங்கள்! (எழுந்து நின்று) நான் முப்பது வருஷ மாக இந்தப் பள்ளிக்கூடத்தின் தலைமை ஆசிரியராக இருக்கிறேன். இதற்குமுன் வந்திராத நெருக்கடி இப்பொழுது வந் திருக்கிறது. அதைத் தீர்த்துவைக்க உங்கள் யோசனேயைக் கேட்கக் கூப்பிட் டேன். யாரோ முத்து என்ற பையன் பத்து வருஷங்களுக்குமுன் இங்கு படித்த வனும். அவன் வந்து ஒரு வெடிகுண் டைப் போட்டுவிட்டான்.

எல்லோரும்: (திடுக்கிட்டு எழுந்து) வெடி குண்டா?

தலைமை: வெடிகுண்டில்லே, அதைவிடப் பலமான கேள்வியைப் போட்டுவிட்டான்!

கணக்கு : என்ன கேள்வி அது?

தலைமை : பத்து வருஷத்துக்குமுன் ஏழு வருஷம் அவன் செலுத்திய பள்ளிக் கூடச் சம்பளத்தையெல்லாம் திருப்பிக் கேட்கிருன்.

கணக்கு : ஏன்?

தலைமை : அவனுக்கு வேலை கிடைக்கவில்லை யாம், கிடைத்தாலும், உடனே போய்விடு கிறதாம்! கொடுத்த சம்பளத்துக்குத் தகுந்த பலன் இல்லை, பணத்தைத் திரும் பத் தாருங்கள் என்கிருன்!

இஸ்டரி : இதேபோல், சரித்திரத்தில் பல சமயங்கள் வந்திருக்கின்றன! 1789-ம் ஆண்டு பிரெஞ்சு நாட்டில், வேலையில்லை, உணவில்லை, எனவே "நாங்கள் கொடுத்த வரிக்குத் தகுந்த பலன் இல்லை; வரி யைத் திரும்பத் தா," என்று சொன்னர் களாம்.

சயன்ஸ் : இதை விஞ்ஞான ரீதியில் விளக்க லாம். கனமான வாயு உள்ள கண்ணுடிக் குழாயையும், லேசான வாயு உள்ள கண் ணுடிக் குழாயையும் ஒன்ருேடொன்று சேர்த்துவைத்தால், கனமான வாயு லேசான வாயுவுள்ள கண்ணுடிக்குழாயுள் புகுந்துவிடும். இது லா ஆப் காசஸ் (Law of Gases) என்பதில் இருக்கிறது. அதைப்போல, ஒவ்வொரு பையன் மண் டையிலும் ஏராளமான விஷயங்களைப் புகுத்தி நாம் அனுப்புகிருேம். வெளியில் உள்ள மண்டைகள் பல காலியாகவும், சில லேசாகவும் இருக்கின்றன. கனமான விஷயமுள்ள மண்டையும், லேசான விஷயமுள்ள மண்டையும் பக்கத்தில் வருகிறபொழுது, கனமான மண்டையி லிருக்கிற விஷயம் லேசான மண்டைக் குள் போய்விடுகிறது. அதனுல் இந்த மண்டை லேசாகிவிடுகிறது. நீங்கள் சொல்லுகிற பையனும் கனமான மண்டை யுடன் போய், லேசான மண்டையுடன் திரும்பிவருகிருன்! எல்லாம் லா ஆப் காசஸ்!

பூகோளம் : ஒன்றும் காஸ் அடிக்காதேயும்! பூகோளத்தில், ஒரு இடத்தில் லேசான காற்று அழுத்தமும், மற்றவிடங்களில் கனமான அழுத்தமும் இருந்தால் உடனே சூருவளிப் புயல் வருமென்று சொல்லப் படுகிறது!

கணக்கு : பத்து வருஷத்துக்குமுன் ஏழுவரு ஷங்கள் செலுத்திய பணத்தைக் கே ருனே! வட்டி கேட்கிருனு? அது தனி வட்டியா? தொடர் வட்டிய தொடர் வட்டியென்றுல் $P\left(1+\frac{r}{100}\right.$ என்ற விதியை உபயோகித்து மொ வட்டியைக் கணக்கிடவேண்டும்.

தலைமை : விஷயத்தை விட்டு, வே ஏதேதோ சொல்லுகிறீர்கள்! ப வருஷத்துக்கு முன் செலுத்திய சம்ப பணத்தைத் திரும்பக் கொடு என் கொடுக்கலாமா? எப்படிச் சமாளிப்ப

இஸ்டரி : எப்படி முடியும்? 1914—18 சண் யில் ஏற்பட்ட யுத்தக் கடன்களை.......

தலை : போதும்! இதற்கு என்ன சொ கிறீர்கள், தான் படித்த படிப்பு பிர ஜனமில்லை, கட்டின சம்பளத்தைத் தி பத் தா என்று கேட்கிருன்.

தமிழ் : அந்த அதிகப்பிரசங்கி எங்கே இ கிருன்.

தலைமை : வெளியே உட்கார்ந்திருக்கிரு " சம்பளம் மாத்திரம் தந்தேனேயொழ நீங்கள் ஒன்றும் சொல்லித்தரவி நானும் ஒன்றும் கற்றுக்கொள்ளவி வேண்டுமானுல் மறுபடியும் பரிட் செய்துபாருங்கள்!" என்று சொ கிருன்.

கண : மறுபடியும் பரிட்சை வைப்பதில் ந கென்ன நஷ்டம்!

தலைமை : அவன் சொல்லுவது புரிய லையா? பரிட்சை வைத்தால், வே மென்றே பெயிலாகிவிடுவான்.

கண : அதிலேதான் நாம் கவனமாயிரு வேண்டும். அவனைப் பரிட்சை செய் பொழுது, அவன் பெயிலாக வி கூடாது. ஆதலால் நாம் மிக ஜாக் தையாக இருக்கவேண்டும்.

தலைமை : எப்படிச் செய்யவேண்டும்?

கண : நாம் கேட்கும் கேள்விகள் மிகச் சு மாக இருக்கவேண்டும். அவன் தோ யடையாவண்ணம் சமாளிக்க வேண் அவனுடைய தோல்வி, உண்மையில் முடைய தோல்வி. இதை நாம் கவ தில் வைத்துப்பரிட்சை செய்யவேண் இந்தப் பரிட்சையில் அவன் பாஸ் செ வேண்டும் என்பது நம்மைமட்டுமல்

இந்தப் பள்ளிக்கூடத்தின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும். அவனைப் பரிட்சையில் பெயிலாக நாம் விடக்கூடாது. இன்றைக்கு இவன் பெயிலாகி சம்பளப் பணத்தைத் திரும்ப வாங்கிக்கொண்டு போனால், நாளைக்கு இதைப்பார்த்து இன்னும் இரண்டுபேர், மறுவாரம் இருநூறு பேர், அப்புறம் சொல்லிமுடியாது!

லைமை : எம்பளாய்மெண்ட் எக்சேஞ்சுக்கு போகிற கூட்டம் முழுவதும் இங்கு வந்துவிடும்!

ண : நாம் அனைவரும் ஒற்றுமையாக இருந்து, அவன் என்ன பதில் சொன்னாலும் சரியானதாக ஆக்கி, அவனைப் பாஸ் செய்ய வேண்டும்.

லைமை : அவன் தப்புந்தவறுமாகச் சொன்னால்?

ண : சொன்னலா? அப்படித்தான சொல்லப்போகிறான், அதில் சந்தேகமே வேண்டாம். எப்படியாவது சரிக்கட்டி, நாம் அவனைப் பாஸ் செய்துவிடவேண்டும்.

லைமை : எனக்கு என்னவோ பயமாக இருக்கிறது!

ண : ஒன்றும் பயப்படவேண்டாம், நான் பார்த்துக்கொள்ளுகிறேன்.

(மணியை அடிக்கிறார். பியூன் வருகிறான்.)

ண : போய், அந்தப் பையனை வரச்சொல்!

(பியூன் போகிறான் முத்து உள்ளே வருகிறான்.)

த்து : ஆ! எல்லோரும் வந்தீட்டிங்களா! கணக்குவாத்தியார் கந்தசாமி, தமிழ் வாத்தியார் தணிகாசலம்பிள்ளை, சயன்ஸ் சடகோபன், இஸ்டரி ஏகாம்பரம், பூகோளம் பூவராகன். சரி! எல்லா பைத்தியங்களும் ஒன்னச் சேந்துவிட்டிங்களா!

ஸ்டரி, சயன்ஸ் : என்ன? பைத்தியங்களா!

த்து : உங்க டீச்சர்ஸ் ரூம்மேலே என்ன நம்பர் போட்டிருக்கு தெரியுமா? நம்பர் 10. மெட்ராசில், மெட்ராஸ் நெ. 10 அப்படியென்பது கீழ்பாக்கத்தைக் குறிப்பது. ஆக நம்பர் 10-ல் இருக்கிற உங்களையெல்லாம் நாங்கள் பைத்தியங்கள் என்று சொல்வது வழக்கம்! என்ன புரியுதா, பைத்தியங்களா!

இஸ்டரி : என்ன கர்வம்!

பூகோ : நம்மைப்பார்த்து பைத்தியங்கள் என்கிறான், சார்!

தமிழ் : அமைதி, அமைதி! ஆத்திரப்படாதீர்கள், பையன் மிகவும் உயர்ந்த குருபக்தியுடையவன் என்று தெரிகிறது. எம்பெருமானிடம் மாறாத அன்புடைய பக்தர்கள் 'பித்தாய் பிறைசூடி பெருமானே!' என்றுதான் பாடுகிறார்கள். ஆண்டவனைப் பார்த்து 'பித்தனே' என்று பக்தன் பக்தியால் சொல்வதுபோல, ஆசிரியர்களைப் பார்த்து இந்த மாணவசிகாமணியும் 'பித்தர்களே!' என்று புகல்கிறான். ஆண்டவனுக்குக் கொடுக்கக்கூடிய இடத்தை ஆசிரியருக்கு இந்த மாணவன் கொடுக்கிறான். என்னே இவன் பண்பு! குருபக்தி! தலைமையாசிரியர் அவர்களே! அவனுடைய சர்டிபிகேட் முதல் பக்கத்தில் 'மாணவனது நன்னடத்தை' என்பதற்கு எதிரில் 'மிகப்போற்றுதற்குரியது' என்று எழுதிக்கொள்ளுங்கள்.

தலைமை : Conduct; Exellent.

முத்து : ஒன்றும் உளராதீங்க! பரிட்சைகளை உடனே ஆரம்பிங்க நேரம் வீணாகுது!

தலைமை : கோபப்படாதே! பரிட்சையென்றால் நிதானமாக இருக்கவேண்டும்! அந்த நாற்காலியில் உட்கார்!

முத்து : சார்! அது அந்தக்காலம்! நீங்க உட்கார்ன்னா உட்காருவது, நில்லுன்னா நிற்கிறது, பெஞ்சுமேல் ஏறுன்னா ஏறுவது! இப்போ நீங்க சொல்லுகிறபடியெல்லாம் கேட்கனுங்கிறது கிடையாது! நான் நின்றுகொண்டேதான் பதில் சொல்லப் போகிறான்!

கண : ஆ! நின்றுகொண்டேதான் பதில் சொல்லப்போகிறேன் என்று மாணவன் சொல்வதால், உடல்நிலை நன்றாக இருக்கிறது என்று தெரிகிறது. சர்டிபிகேட்டின் இரண்டாவது பக்கத்தில் Physical Fitness என்பதற்கு எதிரில் Very Good என்று எழுதிக்கொள்ளுங்கள்.

முத்து : (முதலில் திடுக்கிட்டு, பின் சமாளித்துக்கொண்டு) நல்லா எழுதிக்கொள்ளுங்கள்! காண்டக்ட் சரியா இருந்து, பிசிகல் பிட்னஸ் இருந்தா மட்டும் பாஸ் செய்துவிட முடியாது. பரிட்சைகளை ஆரம்பிங்க!

தலை : முதலில் இங்கிலீஷ் பரிட்சை வைக்க லாம் !

முத்து : தாராளமாக ! ஏன், ஹெட்மாஸ்டர் சார், அப்படி முழிக்கிறீங்க ! இங்கிலீஷ் கிளாசில் எவ்வளவுதடவை, கேள்வி கேட்டு பதில் சொல்லலைன்னு, எங்களை வெளியே நிக்கச்சொல்லியிருக்கிங்க ! ஏன் கேள்வி நல்லா கேளுங்க இப்போ !"

தலை : ஒரு நிமிஷம் !

முத்து : ஒருநிமிஷமென்ன, பத்து வருஷம் கழிச்சு வந்திருக்கேன் கேள்வி கேளுங் கள் !

தலை : சரி ! What is a pronoun and use it in a sentence ? very simple !

முத்து : (பழித்துக்காட்டுவதுபோல்) Very simple ! But I do not know the answer !

(சிரிக்கிறான்)

தலைமை : என்ன இதற்குக் கூடவா தெரிய வில்லை !

முத்து : நோ சார் ! உங்களுக்கு நாமம் சார் !

தலைமை : என்ன செய்யறது, இந்தக் கேள் விக்குக்கூட பத்தாவது படிச்ச பையனுக் குப் பதில் தெரியலை என்றால் ?

கண : பையன் இங்கிலீஷ் பரிட்சையில் பாஸ் செய்துவிட்டான்.

மற்றவர்கள் : (ஆச்சரியத்துடன்) எப்படி ?

கண : ஹெட்மாஸ்டர் கேட்டதில் இரண்டு கேள்விகள் இருக்கின்றன. ஒன்று What is a pronoun இரண்டாவது Use a pronoun in a sentence. பையன் முதல் கேள்விக்குப் பதில் சொல்லவில்லை, ஆனால் இரண்டாவது கேள்விக்குப் பதில் I do not know the answer என்பது அதில் வருகிற I என்பது First person singular pronoun. பையனுக்கு 53 மார்க் !

முத்து : அப்படியே பார்த்தாலும் 100-க்கு 50 தான் கொடுக்கனும். 3 மார்க் எப்படி வந்தது.

கண : பரிட்சை மார்க் போடும்பொழுது கை யெழுத்துக்கு இவ்வளவுன்னு ஒதுக்க ணும். மொத்தம் 100-ல் 90 மார்க், பதி லுக்கு, 10 கையெழுத்துக்கு. இரண்டில் ஒரு கேள்விக்குப் பதில் சொன்னதால் 45. இப்பொழுது எழுத்தின் மூலமல்ல சொல்வதுமூலம் நீ பரிட்சை எடுக்கிறாய் ! உன் குரல் கணீரென்று இருப்பதால் 10-க்கு 8 மார்க் போட்டேன். ஆக 5[illegible] ஹெட்மாஸ்டர் சார் ! இங்கிலீஷில் பை[illegible] னுக்கு 100-க்கு 53 பிரசிடென்சி ஆ[illegible] ரேஜைவிட 13 மார்க் கூட ! கங்கரா[illegible] லேஷன்ஸ் !

முத்து : சரி, இங்கிலீஷில் பாஸ்செய்துவி[illegible] டேன் ! அவ்வளவுதானே ! மற்ற ஐந்[illegible] பரிட்சை இருக்கல்ல, பார்த்துக்கொள்[illegible] லாம் ! நல்லா படிக்கற காலத்திலே பா[illegible] செய்யறதுக்கு நான் கஷ்டப்படுவே[illegible] இப்போ உங்க தாத்தா வந்தாலும் எ[illegible] னைப் பாஸ்பண்ணவைக்கமுடியாது !

தலை : அடுத்தபடியாகத் தமிழ்ப் பரிட்[illegible] ஆரம்பம் !

(தமிழாசிரியர் தணிகாசலம் பிள்[illegible] எழுந்துவருகிறார்.)

முத்து : வாங்க, பொடிமட்டை ! உங்க[illegible] நாங்கள் படிச்சகாலத்தில் அப்படித்தா[illegible] அழைக்கிறது ! ஒரு பாட்டை வகுப்[illegible] சொல்றதுக்குள் ஒரு பொடிமட்டைை[illegible] காலிசெய்கிறார் ! இவர் வீட்டி[illegible] சாப்பாட்டில்கூட பொடியைக் கலந்[illegible] தான் சாப்பிடுவார்னு நாங்கள் சொல்ற[illegible] வழக்கம் ! என்னங்க பொடிமட்டை[illegible] புலவரே ! ஒருதடவை உங்கள் நாற்கா[illegible] குக் கீழ் வெங்காயவெடி வெடிச்சுதுல்[illegible] அந்த வெங்காயவெடியை வைச்ச[illegible] நான்தான் ! நானேதான் ! நானேதான்[illegible]

தமிழ் : அருமந்த சீடனே ! உன் குரு வ[illegible] கத்தை எண்ணி அடிக்கடி நான் ம[illegible] வதுண்டு ! உன்னைப் போன்றவர்க[illegible] குப் பாடஞ்சொல்லிக்கொடுத்துப் பு[illegible] பெற்ற நான், இப்பொழுது யாரோ சு[illegible] னுக்கும் குப்பனுக்கும் பாடஞ்சொல்[illegible] கொடுக்கும்பொழுது என் மனம் என்[illegible] யிலில்லை. இப்பொழுது ஒரு சிறிய கேள்[illegible] கேட்கப்போகிறேன்.

முத்து : ஏன் ? ஒரு கடா விடுங்கள், நா[illegible] அதற்கு விடா தருகிறேன்.

தமிழ் : கேள்வி இதோ ? பாரதம்பாடிய பெ[illegible] தேவனார் இயற்றியது என்ன ?

முத்து : என்ன கேள்வி இது ? கேள்வி[illegible] லேயே பதில் இருக்கிறது ? பாரதம்பா[illegible] பெருந்தேவனார் இயற்றியது பா[illegible] (வாயைப் பொத்திக்கொண்டு) ஆ ! ப[illegible] சொல்லப்போயிட்டேனே ! இருங்[illegible] இருங்க ! பாரதம்பாடிய பெருந்தேவ[illegible] இயற்றியது " Taxi Car " என்ற நாவ[illegible]

(தொடரும்)

...ணியும் பணியும்

[செல்வன்]

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

" சூடாமணி! நீ அபாயத்தில்தான் இருக்...றாய் ஆனாலும் பிழைத்துக்கொள்வாய!" ...ன்றேன். அவள் நம்பவில்லை.

" நான் இறந்துவிடுவேன். ஆம், நான் ...றந்துவிடுவேன்!" என்று கூறினாள். அவள் ...கவும் உற்சாகமாக இருந்தாள். எனக்கு ...கவும் பயமாக இருந்தது. " கவலைப்படாதீர் ...ள். சாவைப்பற்றி நான் சஞ்சலப்படவில்லை" ...ன்று கூறிக்கொண்டே உட்கார்ந்தாள்.

" டாக்டர்! உங்களுக்கு என் மகிழ்ச்சிகலந்த ...ன்றி! நான் உங்களைக் காதலிக்கிறேன்."

நான் அவளையே பார்த்துக்கொண்டிருந் ...தேன். மீண்டும், " நான் உங்களைக் காதலிக் ...றேன்!" என்றாள் சூடாமணி.

" நான் அதற்கு அருகதை அல்ல" என் ...றேன். உடனே அவள் தன் கைகளை நீட்டி ...ன் தலையைப் பிடித்துக்கொண்டு முத்தமிட் ...டாள். உணர்ச்சிவேகத்தில் நான் அப்படியே ...த்திவிட்டேன். மண்டியிட்டு என் தலையை ...லையணையில் புதைத்துக்கொண்டேன். ...வள் பேசவில்லை. அவளது விரல்கள் நடுங் ...கிக்கொண்டிருந்தன. அவள் அழும் குரல் ...கேட்டது, சமாதானம் செய்தேன். என்ன ...சொன்னேன் என்று சரியாக ஞாபகம் இல்லை.

" வேலைக்காரி எழுந்துவிடுவாள் சூடாமணி! ...மைதியாக இரு. உடம்பை அலட்டிக்கொள் ...ளாதே" என்றேன்.

" போதும். போதும். அவர்களைப்பற்றிக் ...கவலைப்படாதீர்கள். எழுந்துவந்தால் என்ன? ...ன்தான் இறந்துவிடுவேனே! நீங்கள் ஏன் ...பயப்படுகிறீர்கள். எங்கே, இப்படிப்பாருங்கள் ...ஏன்? நீங்கள் என்னை நேசிக்கவில்லையா? ...ன் தவறுதலாகப் புரிந்துகொண்டேனா? ...அப்படியானால் மன்னித்துவிடுங்கள்" என்றாள் ...சூடாமணி.

" சூடாமணி! கண்ணே! உன்னை நான் ...காதலிக்கிறேன்" என்றேன். என்னை விழுங்கி ...டுவதுபோல் பார்த்தாள். கைகளை அகல ...விரித்து "என்னை அணைத்துக்கொள்ளுங்கள்" ...என்றாள்.

நல்லவேளை நான் பைத்தியமாக மாறவில்லை. சூடாமணி தன் சாவை வருந்தி வரவழைக்கிறாள் என்று நினைத்தேன். சாவு நிச்சயம் என்று தெரியாமல் இருந்தால் என்னைப்பற்றிக் கவலைப்பட்டிருக்கமாட்டாள். வாழ்க்கை என்றால் என்ன என்றுகூட தெரியாமல் அந்த இளம்பருவத்தில் சாவதை அவள் விரும்பவில்லை. அதனால்தான் சாவு நெருங்கி வரும் வேளையில் என்னைக் காதலித்தாள் என்று நினைக்கிறேன். என்னை இறுக அணைத்துக்கொண்டாள். அவள் பிடியைத் தளர்த்தவேயில்லை. நான் அமைதியாக இருக்கும்படி எவ்வளவோ வேண்டினேன், " நான் சாகப் போகிறேன். எதைப்பற்றியும் எனக்குக் கவலையில்லை" என்றாள். இதையே அடிக்கடி கூறினாள்.

" நான் பிழைத்தெழுந்து வாழ்க்கை நடத்த ஆரம்பித்தால், எனக்கு இதைப்பற்றி வெட்கமாக இருக்கும். வேதனைகூட ஏற்படும். ஆனால் நானதான் சாகப்போகிறேனே."

" நீ இறந்துவிடுவாய் என்று யார் சொன்னார்கள்?" என்றேன்.

" என்னை ஏமாற்றுகிறீர்கள். பொய் சொல்லக்கூடத் தெரியவில்லையே! உங்கள் முகம் உங்களைக் காட்டிக்கொடுத்துவிட்டதே."

" சூடாமணி! நான் உன் நோயைக் குணப்படுத்திவிடுகிறேன். தாயின் வாழ்த்துடன் நாமிருவரும் ஒன்றாக வாழ்வோம்."

" இல்லை! இல்லை. நீங்கள்தான் சொல்லிவிட்டீர்கள் நான் சாகத்தான் வேண்டும்."

வேண்டாத விஷயம்கூட சமயத்தில் வேதனையைக் கிளப்பிவிடுகிறது. என் பெயர் என்ன என்றாள். " சுந்தரம்" என்றேன். வீட்டில் உள்ளவர்கள் என்னை டாக்டர், டாக்டர் என்று அழைத்தனர் அழைத்துப் பயன்......

என்னைப் பார்த்து வேடிக்கையாகச் சிரித்தாள். வரவிருக்கும் கேடுக்கு அறிகுறிபோல் தோன்றியது அவளது அந்தப் பயங்கரச் சிரிப்பு. இரவு முழுதும் அவள் அருகில், பைத்தியம்பிடித்தவனபோல் உட்கார்ந்திருந்தேன். காலையில் எழுந்து வெளியில் சென்றுவிட்டேன்.

நான் வீடு திரும்பும்பொழுது, காலை உணவு முடிந்துவிட்டது. என்னால் அவளை அடையாளம் கண்டுகொள்ளமுடியவில்லை. அந்த அளவுக்கு அவள் மாறியிருந்தாள். எப்படித்தான் அந்த நாட்கள் கழிந்தனவோ எனக்குத் தெரியாது.

மூன்று நாட்கள். இரவும் பகலும் சூடாமணியின் உயிர் ஊசலாடிக்கொண்டிருந்தது. எத்தனையோ பேசினாள்! கடைசி இரவு! அதை என்னால் மறக்கவே முடியாது. அவளருகில் உட்கார்ந்துகொண்டு பிழைத்தெழ மாட்டாளா என்ற ஆவல் ததும்ப அச்சத்தை உள்ளடக்கிக்கொண்டிருந்தேன்.

சூடாமணியின் தாய் வந்தாள், வேண்டியவர்களுக்குச் சொல்லி அனுப்பும்படி கூறினேன்; சூடாமணி தன் தாயைப்பார்த்து, "அம்மா, நாங்கள் இருவரும் ஒருவரையொருவர் காதலிக்கின்றோம்" என்றாள்.

"என்ன சொல்கிறாள் டாக்டர்?" என்றாள் சூடாமணியின் தாய்.

"ஒன்றுமில்லை. காய்ச்சல் அதிகம். ஏதேதோ பேசுகிறாள்" என்றேன்.

"ஏன் என்னை ஏமாற்றுகிறீர்கள். சற்று முன்புதானே என் மோதிரத்தை மாற்றிக்கொண்டீர்கள்? ஏன் ஒன்றும் தெரியாதது போல் பாசாங்கு செய்கிறீர்கள்? என் தாய் நல்லவள். அவள் நம்மைப் புரிந்துகொ[ள்]வாள். மன்னித்துவிடுவாள். நான்தான் சா[கப்] போகிறேனே. நான் ஏன் பொய் பேசவே[ண்]டும்" என்றாள் சூடாமணி.

அறையை விட்டு வெளியே வந்துவிட்டே[ன்]. கிழவிக்கு விஷயம் இன்னதென்று புரிந்துவி[ட்]டது. அதற்கு மறுநாள் சூடாமணி இறந்[து] விட்டாள். இறப்பதற்குமுன் என்னைத் த[ன்]னுடன் தனியாக இருக்கச்சொன்னாள். ம[ற்ற]வர்களை வெளியே போகச்சொன்னாள்.

"என்னை நம்புங்கள் உங்களைத்தவிர வே[று] யாரையும் நான் காதலித்ததில்லை. என் மோ[தி]ரம் பத்திரம்" என்றாள்.

டாக்டர் என் பக்கம் திரும்பி "வேறு ஏ[தா]வது பேசலாம், என்னைப்போன்றவர்க[ள்] உணர்ச்சிக்கு இடம் அளித்தல் அவ்வள[வு] நல்லதல்ல" என்று கூறிவிட்டு சிறிதுநே[ரம்] எதுவும் பேசாமல் அமைதியாக உட்கா[ர்ந்]திருந்தார். பின் மறுபடியும் பேச்சைத் து[வங்]கினார். "அதற்குப் பிறகு ஒரு வணிகனி[ன்] மகளை மணந்துகொண்டேன், அதிக வர[த]ட்சிணைப்பணத்துடன். அவள் பெயர் அகல்[யா]. அவள் மிகவும் கொடியவள். ஆனால் ப[கல்] முழுவதும் தூங்குவாள். எனக்கு இப்பொ[ழு]தெல்லாம் வீறிட்டு அழும் குழந்தையைப்ப[ற்]றியும், வசைபாடும் மனைவியைப்பற்றியும்தா[ன்] சிந்தனை" என்று கூறிமுடித்தார் டாக்டர்.

●●

இந்தியாவில் முதல் தொழிற்சங்கம்

இந்தியாவில் தொழிற்சங்க இயக்கம் முதன் முதலில், முதல் உலகப் பெரும்போருக்குப் பிறகுதான் தோன்றிற்று.

முதல் உலகப் பெரும்போர் முடிந்தவுடன் ஆங்காங்கு பொருளாதார நெருக்கடியும் மந்தமும் ஏற்பட, அதனால் தொழிற்சாலைகளில் சம்பளக்குறைப்பும், ஆட்குறைப்பும் செய்யும்படி நேரிட்டது. போதுமான சம்பளமும், வேலையும் கிடைக்கப்பெறாத தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் மறியல்போன்ற கிளர்ச்சிகளில் ஈடுபட்டனர். வேலைநிறுத்தங்களின்போது தொழிலாளர்களிடையே ஏற்பட்ட ஒருவித அமைப்பு நாளடைவில் தொழிற்சங்கமாக உருவெடுக்கத்தொடங்கிற்று. இந்தியாவில் முதன்முதல் ஏற்பட்ட தொழிற்சங்கம் சென்னைத் தொழிற்சங்கம் (Madras Labour Union) ஆகும். இதனைத் தோழர் பி. பி. வாடியா (B. P. Wadia) அவர்கள்தான் 1918-ஆம் ஆண்டில் சென்னையில் தோற்றுவித்தார். இத் தொழிலாளர்களின் குறைகளைப் போக்குவதிலும், கோரிக்கைகளை நிறைவேற்றுவதிலும் அரும்பணிகள் ஆற்றிவந்தது. 1921-ஆம் ஆண்டில் தொழிற்சங்க உரிமைகளைக் கட்டுப்படுத்தும் மசோதா ஒன்று வெள்ளையர் அரசாங்கத்தால் நிறைவேற்றப்பட்டதால், பின்னர் இது பல இடையூறுகளை ஏற்கவேண்டி நேரிட்டது.

பதிவு செய்துகொள்ளப்படும் தொழிற்சங்கங்களுக்குச் சலுகைகளும், உரிமைகளும் அளிக்கும் மசோதா ஒன்று 1926 ல் இந்தியப் பேரசால் நிறைவேற்றப்பட்டது.

பந்தயம்

[வளவன்]

இருளடர்ந்த மாரிக்காலம். இரவு மணி த்து. பாங்கர் சோமசுந்தரம் தனது அறை ில் அங்குமிங்கும் உலவிக்கொண்டிருந்தார், ம்மதியற்று. துயரின் கோடுகள் அவர் கத்தில் நன்கு படிந்திருந்தன. உலவிக் காண்டிருந்தவர், ஜன்னல் கம்பியைப் பிடித் துக்கொண்டு "அந்தப் பந்தயத்தை நான் ன் கட்டினேன்?" என்று கேட்டார்.

அந்தப் பந்தயம்! சரியாகப் பதினைந்து ஆண்டுகளுக்கு முன் நடந்த சம்பவம் அவர் னக்கண்முன் வந்தது.

சோமசுந்தரம் அப்பொழுது செல்வத்தில் ரண்டுகொண்டிருந்தார். கோடீசுவரன் என் ல், உண்மையிலேயே பணம் கோடிக்கணக் ில் அவரிடம் முடங்கிக்கிடந்தது. அன்று அவர் மாளிகையில் பெரிய விருந்தொன்று டைபெற இருந்தது. விருந்தினர்—ஊர்ப் பரிய மனிதர்கள், நண்பர்கள், உறவினர்கள், டித்தவர்கள் எல்லோரும் முன்பக்கத்தில் அயர்ந்து பொழுதுபோக்காகப் பேசிக்கொண் ருந்தனர். அவர்களுடைய பேச்சில் திடீ ரன்று "தூக்குதண்டனை சரியா, தவரு?" ன்ற கேள்வி எழுந்தது.

கூடியிருந்தவர்களில் பெரும்பாலோர் ாக்குதண்டனை தவறு என்று வாதிட்டனர். அநாகரிகம்!" "காட்டுமிராண்டிக்காலத்துப் ழக்கம்!" என்று அவர்கள் கண்டித்தார்கள். தூக்குத் தண்டனை கொடுப்பதற்குப் பதில், ஆயுள் தண்டனை கொடுப்பது நல்லது!" ன்று சிலர் கூறினார்கள்.

• •

பாங்கர் சோமசுந்தரம் அதை ஏற்றுக்கொள் வில்லை. "அது சரியானதல்ல, தூக்குத் ண்டனை, ஆயுள் தண்டனை இரண்டையும் இங்கு இருப்பவர்கள் யாரும் அனுபவித்தது கிடையாது. ஆனால் எப்படியிருக்கலாம் என்று எண்ணிப்பார்க்கும்பொழுது ஆயுள் தண்டனையைவிட தூக்குத் தண்டனையே மேல் என்று எனக்குப் படுகிறது. தூக்குத் தண் டனை உயிரை உடனே பிரித்துவிடுகிறது, ஆயுள் தண்டனை கொஞ்சங் கொஞ்சமாகப் பிரிக்கிறது. எது நல்லது? உடனே உயிரைப் போக்குவதா, அல்லது சிறிது சிறிதாகச் சித் வதை செய்வதா?"

விருந்தினரில் ஒருவர் "இரண்டும் நல்ல தல்ல. மனிதனுக்குக் கடவுள் உயிரைத் தந்தார். கடவுளாகப் பார்த்துத் திரும்ப எடுத்துக்கொள்ளும்வரை நாம் ஒன்றும் செய் யக்கூடாது!" என்று தத்துவம் பேசினார்.

"இந்த வாதம் சரியானதல்ல. கடவுளாகப் பார்த்துச் செய்கிறரென்றால், தூக்குத் தண் டனை தருவதும், ஆயுள் தண்டனை தருவதும், எல்லாம் அவருடைய செயல் என்றாகிவிடும்" என்று மற்றொருவர் மறுத்தார்.

"நாம் ஏன் பேசவேண்டும்? கந்தப்பனை கேட்கலாம், அவன்தான் சட்டப் புத்தகங் களைக் கரைத்துக் குடித்தவன்!" என்று ஒரு பெரியவர் கூறினார்.

கந்தப்பன்—இருபத்தைந்து வயதுள்ள வழக்கறிஞன்—முன்வந்தான். "தூக்குத் தண் டனை, ஆயுள் தண்டனை இரண்டும் சரியான தல்ல. ஆனால் இரண்டினுள் ஏதாவதொன் றைத் தேர்ந்தெடுக்கவேண்டும் என்றால், நான் ஆயுள் தண்டனையே சரி என்பேன். இறந்து போவதைவிட எப்படியாவது வாழ்ந்துகொண் டிருப்பது மேல்."

அதற்குமேல் விவாதம் பலமாகத் தொடர்ந்

த்து. பாங்கர் சோமசுந்தரம்—அப்பொழுது அவருக்கு வயது முப்பது இருக்கும்—கோபத்துடனும், ஆத்திரத்துடனும் பேசினர். தூக்குத் தண்டனை மேல் என்று அவர் வாதிட, ஆயுள் தண்டனை மேல் என்று கந்தப்பன் வாதிட்டான். சோமசுந்தரத்துக்கு கோபம் அதிகமானது.

“எல்லாம் வாதத்துக்குப் பேசிவிடலாம்! நான் ஒரு லட்சரூபாய் பந்தயம் கட்டுகிறேன். ஒரு ஐந்து ஆண்டுகள்கூட உன்னல் ஒரு அறையில் அடைபட்டுக்கிடக்கமுடியாது!” என்று சோமசுந்தரம் மேஜையைத் தட்டிப் பேசினர்.

கந்தப்பன் எழுந்துநின்று “ஐந்து ஆண்டுகளென்ன, பதினைந்து ஆண்டுகள் வேண்டுமானலும் என்னல் இருக்கமுடியும்! பந்தயங் கட்டிப் பாருங்கள்!” என்று பதிலளித்தான்.

“சரி, இங்கு இருப்பவர்களெல்லாம் சாட்சி! பதினைந்து ஆண்டுகள் நீ உள் இருக்கவேண்டும். நான் ஒருலட்சம் ரூபாய் பந்தயம் கட்டுகிறேன்?” என்று சோமசுந்தரம் கூறினர்.

பொழுதுபோக்காக ஆரம்பித்தப் பேச்சு, கடைசியில் விபரீதமான பந்தயங்கட்டுவதில் முடிந்தது. சோமசுந்தரத்துக்கு அப்பொழுது ஒருலட்சம்ரூபாயைப்பற்றிக் கவலைப்படவில்லை. எகிப்து பருத்தி இரண்டணு விலையேறியதில், அவருக்கு இருபதுலட்சம் லாபம் வந்ததாகப் பேசிக்கொண்டார்கள். அதனல் பந்தயங் கட்டிய ஒருலட்சத்தைப் பெரிதாகப் பொருட்படுத்தவில்லை. ஆனல் கந்தப்பன் பதினைந்து ஆண்டுகள் சிறைவாசத்தை எப்படி ஒத்துக்கொண்டான்?

விருந்து நடைபெறும்பொழுது, சோமசுந்தரம் கந்தப்பன் பக்கத்தில் வந்து இரக்கப்பட்டார்; “கந்தப்பா! வேடிக்கையாகப் பேசினேம். அதை இப்படித் தீவிரமாக எடுத்துக்கொள்ளவேண்டாம். அப்படியே விட்டுவிடலாம். ஒருலட்சம் எனக்குப் பெரிதல்ல, ஆனல் உன்னுடைய இளம்பருவத்தில், நாலைந்து ஆண்டுகளை இழப்பதென்றுல், பாவம்! நாலைந்து ஆண்டுகள் என்று சொல்கிறேன், ஏனென்றுல் அதற்குமேல் உன்னல் தாங்கிக்கொள்ளமுடியாது. உண்மையாகக் குற்றம் செய்து சிறைவாசம் கிடைத்தால், வேறு வழியில்லை என்று இருந்துவிடலாம். ஆனல் தானுக மேற்கொள்ளும் சிறைவாசம் கடுமையானதாக இருக்கும். விரும்பினல் எந்த சமயத்திலும் போய்விடலாம் என்ற எண்ணம் மனதைக் குத்திக்கொண்டேயிருக்கும். பாவம்! நீ ஏன் இந்தப் பந்தயத்தை மேற்கொள்கிருய்?”

இப்பொழுது—பதினைந்தாண்டுகளுக்கு அப்புறம்—உலவிக்கொண்டிருக்கும் பாங்கர் சோமசுந்தரம் தன்னைத்தானே நொந்துகொண்டார். “அந்தப் பந்தயத்தை நான் கட்டினேன். அதனல் என்ன பலன்? கந்தப்பனுடைய வாழ்வில், நல்ல பருவத்தில், பதினைந்து ஆண்டுகள் வீண், எனக்கு ஒருலட்ச ரூபாய் வீண். இதனல் தூக்குத்தண்டனையைவிட ஆயுள் தண்டனை நல்லது என்றே, கெட்டது என்றே உலகம் முடிவுசெய்யப்போகிறதா? ஒன்றும் கிடையாது. அப்பொழுது இருந்த பணத் திமிரில் நான் பந்தயங்கட்டினேன், ஒரு லட்சம் பணம் கிடைக்கும் என்ற பணத்தாசையில் அவன் ஒப்புக்கொண்டான். அவ்வளவுதான்.

பந்தயங் கட்டியதற்கப்புறம் நிகழ்ந்தவை சோமசுந்தரம் நினைவுக்குவந்தன. பந்தயத்தின்படி, சோமசுந்தரம் மாளிகைக்குப் பின்புறத்தில் உள்ள தோட்டத்து மூலையில் இருக்கும் சிறு அறையில் கந்தப்பன் “சிறை” செல்வதாக ஒப்புக்கொள்ளப்பட்டது. அந்த அறையை விட்டு அவன் சிறிதும் நகரக்கூடாது. யாரையும் பார்ப்பதோ, யாருடனும் பேசுவதோ, மற்றவர்கள் பேசுவதைக் கேட்பதோ, கடிதங்கள்—பத்திரிகைகள் பெறுவதோ—வெளியுலகத்திலிருந்து அவனுக்கு எதுவும் வருவது கூடாது. ஒப்பந்தப்படி கந்தப்பனுக்கு வேண்டிய உணவு, உடை, சிகரெட், புத்தகங்கள், எழுதுவதற்குத் தாள், மைக்கூடு, பேனு, பிடில்—கந்தப்பனுக்கு கொஞ்சம் இசைப் பயிற்சி உண்டு—இவைகளை எவ்விதத் தாமதமுமின்றி, எவ்வளவு வேண்டுமென்றுலும், சோமசுந்தரம் தரவேண்டும். வெளியில் ஒரு காவற்காரன் இருப்பான், கந்தப்பனுக்கு ஏதாவது வேண்டுமென்றுல், ஒரு கடிதத்தில் எழுதி, கதவில் வைக்கப்பட்டுள்ள சிறு வழியில் போடவேண்டும். காவற்காரன் அதை பாங்கரிடம் அனுப்பி, வேண்டியவற்றை வரவழைப்பான். பந்தய விதிகள் சிறிதுகூட விடாமல் ஒரு பத்திரத்தில் எழுதப்பட்டன. அதன்படி கந்தப்பன் நவம்பர் 1923 காலை 6 மணியிலிருந்து, நவம்பர் 4, 193[illegible] காலை 6 மணிவரை, தோட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள சிறையில் இருக்கவேண்டும். அதில் வெற்றிபெற்றுல், பாங்கர் சோமசுந்தரம் கந்தப்பனுக்கு ஒரு லட்சரூபாய் தரவேண்டும். ஆனல் ஒப்பந்தத்தில் வரையறுத்துள்ள விதிகளில் சிறிதளவு மீறினலும், பதினைந்து ஆண்டுகளில் ஒரு வினடி முன்னதாக அவன் சிறையைவிட்டு வெளிவந்தாலும், பந்தயத்தில்

தப்பன் தோற்றுவிட்டதாகக் கருதப்படும், ாமசுந்தரம் பணம் எதுவும் தரவேண்டிய இல்லை.

விருந்து நடந்த மறுநாள் காலை சரியாக றுமணிக்கு, சோமசுந்தரம் தோட்டத்தி ருந்த அறைக்குள், கந்தப்பன் நுழைந்தான். தயம் ஆரம்பமானது.

சிறை வாழ்வின் முதல் ஆண்டில் கந்தப்பன், ன்ன செய்வதென்று புரியாமல் தனிமையில் தனைப்பட்டான். சிகரெட் குடிப்பது அவ டைய தனிமையை அதிகப்படுத்துவதாக ருந்தது. அதனால் அதையும் விட்டுவிட் ன். பெரும்பாலான நேரங்களில், தனது லை எடுத்துவைத்து வாசித்துக்கொண் ருப்பான். படிப்பதற்காகக் கேட்ட புத்தகங் பெரும்பாலும் திடுக்கிடும் சம்பவங்கள், ர்க்காதல், சாதாரண நாவல்கள்போன்று ாழுதுபோக்கு நூல்களாக இருந்தன.

இரண்டாம் ஆண்டில், கந்தப்பன் பிடில் சிப்பதை நிறுத்தி, படிப்பதில் அதிகக் னம் செலுத்தினான். கேட்டவைகளும், ழ்பெற்ற ஆசிரியர்கள் எழுதிய நூல்களா ந்தன.

ஐந்தாவது ஆண்டில் கந்தப்பனிடம் ஒரு, றுதல் காணப்பட்டது; படிப்பதை அவன் த்திவிட்டான். பிடில் சத்தமும், சிகரெட் கையும் அவன் அறையிலிருந்து வெளிவந் . அவன் சாப்பிடும் உணவு அதிகமானது, தில் வகையும், சுவையும் அதிகரித்தன. ப்பிட்டதும் படுக்கையில் நீண்டநேரம் படுத் கிடப்பான். திடீரென்று எழுந்து, கோப த் தன்னைத்தானேத் திட்டிக்கொள்வான். கு படுதது, கையைத் தலையில் வைத்துக் ள்வான். அவன் அழுகிற குரல் வெளியில் ருக்கும் காவற்காரன் காதில் விழும். இரவு ங்களில் ஏதாவது அவன் எழுதிக்கொண் ப்பான். காலையில் அவற்றைக் கிழித்து வான்.

ஆறுவது ஆண்டில் கைதி மீண்டும் படிக்க ம்பித்தான். இப்பொழுது மற்ற மொழிகளை றுக்கொள்ள ஆரம்பித்தான். தெலுங்கு, மொழி, உருது, சீனம், பிரெஞ்சு, லத்தீன், க்கம் இப்படி மொழிபபயிற்சி போய்க் ண்டேயிருந்தது. அந்த நான்கு ஆண்டு ல் கைதிகேட்ட நூல்கள், பாடல்கள், வேதங் உபநிஷத்துக்கள். கீதை, இதிகாசங்கள், து காவியங்கள், சீனத்து இலக்கியம், ஞ்சு நாவல்கள். லத்தீன் கட்டுரைகள், க்க நாடகங்கள்—சுமார் எழுநூறுக்கு மேற்பட்ட நூல்கள் அவன் அறைக்கு அனுப் பப்பட்டன. அவன் குடுப்பிடும் நூல்களைக் கண்டுபிடித்து, வாங்கித் தருவதற்குள் பாங்கர் சோமசுந்தரத்துக்குப் போதுமென்றாகிவிட் டது. பத்தாவது ஆண்டு இறுதியில் கைதி யிடமிருந்து சோமசுந்தரத்துக்கு ஒரு கடிதம் வந்தது, "சிறைக்காவலரே! ஒரு கவிதையை, நான் ஏழு மொழிகளில் திருப்பி எழுதியிருக் கிறேன் அந்தந்த மொழியில் சிறந்த ஆசிரியர் களாய் இருப்பவர்களிடம் இதைக் காட்டவும், அவற்றில் குற்றங்குறை சிறிதளவும் இல்லை யென்றால், அதை எனக்கு அறிவிக்கத் தோட் டத்தில் இரண்டுதடவை மணியடிக்கச் செய்ய வும்! பல மொழிகளில், பலப்பல அறிஞர்கள் அழியாத கருத்துக்களைத் தேங்கவைத்துச் சென்றுள்ளார்கள்! அவற்றைப் படிக்கும் பொழுது இதற்குமுன் உணராத இன்பத்தை நான் பெறுகிறேன்!"

மொழியாசிரியர்களிடம் அந்தக் கடிதம் காண்பிக்கப்பட்டது. அவர்களால் குற்றம் எதுவும் சொல்லமுடியவில்லை. தோட்டத்தில் வேலையாள் கைமணியை எடுத்துச்சென்று, இரண்டுதடவை நீண்டநேரம் அடித்தான்.

பதினோராவது ஆண்டில் கைதி ஒரு சிறிய நூலை மட்டும் விரித்துவைத்துக்கொண்டு படித்துக்கொண்டிருந்தான். அந்த நூல் திருக்குறள்! பாங்கருக்கு மிக ஆச்சரியமாக இருந்தது, நான்கு ஆண்டுகளில் எழுநூறுக்கு மேற்பட்ட நூல்களைப் படித்துத் தள்ளிய கைதி, ஒரு ஆண்டு முழுவதும் ஒரு சிறு நூலை மட்டும் வைத்துக்கொண்டு உட்கார்ந்திருப் பது!

கடைசி இரண்டு ஆண்டுகளில் கைதி, குறிப்பிடத்தகுந்த வகையில் எதையும் படிக்க வில்லை. கவிதைகள், சிறுகதைகள், நாடோ டிப்பாடல்கள், பின்பு திடீரென்று விஞ்ஞானம், தத்துவம், பொறியியல், மருத்துவம், தொடர் பின்றி அங்கொன்றும் இங்கொன்றுமாக நூல் களின் பெயர்கள் எழுதப்பட்டன. பாங்கர் அந்த நூல்களை அனுப்பித்தந்தார். கைதி அதிக ஆர்வம் காட்டாமல் கையில் பட்டதை விரித்துப் படித்துவந்தான்.

பாங்கர் சோமசுந்தரம் அவற்றை நினைத்துப் பார்த்து பெருமூச்செறிந்தார். "நாளைக் காலை ஆறுமணியுடன் ஒப்பந்தக் காலம் முடிவடை கிறது. பந்தயங்கட்டியதன்படி, நான் அவ னுக்கு ஒரு லட்சம் ரூபாய் கொடுக்கவேண்டும். இப்பொழுது இருக்கிற நிலையில், என் வீடு வாசல் எல்லாவற்றையும் விற்றால்தான்

"அந்தப் பணம் கிடைக்கும். அப்புறம் நான் ஓட்டாண்டிதான் !"

பதினைந்து ஆண்டுகளுக்குமுன், அந்தப் பந்தயம் கட்டியபொழுது, லட்சக்கணக்கில் பணம் புரண்டது உண்மை, ஆனால் அதற்கப்புறம் ஏற்பட்ட நெருக்கடிகள், நஷ்டங்கள், முழுகிப்போன கடன்கள், வியாபாரத் தோல்விகள், கடன்கொடுத்ததுபோக, பிறரிடம் கடன் வாங்கவேண்டிய நிலை எல்லாம், பெருமையுடன் பந்தயங்கட்டிய சோமசுந்தரத்தை, பந்தயப்பணத்தை நினைக்கும்பொழுது பயந்து நடுங்கச்செய்துவிட்டது. இப்பொழுது அவருக்கு கடன் அதிகமா, சொத்து அதிகமா, என்று அவருக்கேத் தெரியாது. இந்த நிலையில் ஒரு லட்சம் ரூபாய்க்கு எங்கு போவது ?

தலையில் கைவைத்துக்கொண்டு பாங்கர் உட்கார்ந்தார். "பாழாய்ப்போன பந்தயம்! பதினைந்து ஆண்டுகளில் அவன் இறந்திருக்கலாம் ! நாளைக் காலை என் சொத்து பூராவும் அவன் கைவசமாகிவிடும். அவனுக்கு வயது நாற்பதுதான். ஒருலட்சம் கிடைத்ததும் அவன் திருமணம் புரிந்துகொண்டு, மனைவியுடன், மாளிகையைவிட்டு உல்லாசமாக உலவ வெளிவருவான் ; நான் அப்பொழுது பிச்சைக்காரனைப்போலச் சுற்றிக்கொண்டிருப்பேன். 'ஐயோ! பாவம்!' என்று அவன் காலணாவோ, ஓரணாவோ போட்டுவிட்டுப்போவான். சே! வெட்கக்கேடான நிலை! கூடாது, அது நடைபெறக்கூடாது! அதற்கு ஒரே ஒரு வழிதான் —அவன் சாகவேண்டும்."

கடிகாரத்தில் மணி மூன்றடித்தது. வீட்டில் எல்லோரும் உறங்கிக்கொண்டிருந்தனர். பாங்கர் தனது இரும்புப்பெட்டியைத் திறந்து, அதிலிருந்து ஒரு சாவியை—பதினைந்து ஆண்டுகளுக்குமுன் வைக்கப்பட்ட சாவியை —எடுத்துக்கொண்டு, நீண்ட போர்வையால் தன்னை மூடிக்கொண்டு, தோட்டத்திற்குள் அடிமேல் அடிவைத்துப் போனார்.

மழை தூறிக்கொண்டிருந்தது. குளிர்காற்று அடித்துக்கொண்டிருந்தது. அந்த இருட்டில் எதையும் பார்க்கமுடியவில்லை. மெதுவாகத் தட்டுத்தடுமாறி பாங்கர் தோட்டத்து மூலைக்கு வந்து சேர்ந்தார். காவற்காரனை இரண்டுதடவைக் கூப்பிட்டார். அவன் அறையின் வெளிப்புறத்தில் படுத்து நன்றாகத் தூங்கிக்கொண்டிருந்தான்.

"இப்பொழுது உள்ளேபோய் காரியத்தை முடித்துவிட்டால். பின் காவற்காரன்பேரில் தான் சந்தேகம் விழும்" என்று பாங்கர் நினைத்துக்கொண்டு, மெதுவாகச் சுவரோரம் நட
ஜன்னல் வழியாக எட்டிப்பார்த்தார்.

மேஜைமேல் சிறிய விளக்கு எரிந்துகொ
டிருந்தது. மேஜைமீது குனிந்தவண்ண
கைதி உட்கார்ந்திருந்தான். சில பு
கங்கள் விரிந்துகிடந்தன. பக்கத்தில் படுக்
விரிக்கப்பட்டிருந்தது. கைதி சிறிதுச
அசையாமல் உட்கார்ந்திருந்தான். பதினை
ஆண்டு சிறைவாழ்வு அவனை அசைவற்
னாக ஆக்கிவிட்டதுபோலும்!

பாங்கர் ஜன்னல் கதவை இரண்டுமூன்
தடவைத் தட்டினார். அப்பொழுதும் கை
அசையவில்லை.

பாங்கர் திரும்ப நடந்து, கதவுப்பக்கம்
தார். பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு
டப்பட்ட பூட்டு! இன்னும் திறக்கப்படவில்
அது துருப்பிடித்து, வலுவிழந்திருந்
சாவியைப் போடுவதற்கு முன்பே அ
திறந்துகொண்டது. பாங்கர் கதவைத் தி
தார். கதவு திறந்ததும், கைதி ஆச்சரி
துடனோ, பயத்துடனோ கூச்சலிட்டு எழுவ
என்று பாங்கர் எதிர்பார்த்தார். ஆ
கைதி எழுந்திருக்கவில்லை. சிறிதுநேரம்—
படக்கும் நெஞ்சுடன் பாங்கர் வாயற்படி
நின்றார். பின் சிறிது தைரியமடைந்து,
நுழைந்தார்.

பதினைந்து ஆண்டுகளுக்குமுன்பிருந்த
தப்பனுக்கும், இப்பொழுது மேஜை
சாய்ந்து உறங்கும் கைதிக்கும் பலத்த வே
பாடு இருந்தது. இவன் எலும்புக்கூட
கன்னங்கள் ஒட்டி, முகத்தில் மயிர் அடர்
தலைமயிர் நீண்டு இருந்தது, தோல் ஒருவி
பழுப்பு நிறம் அடைந்துவிட்டது, முதுகு
லடைந்திருந்தது, தலையில் நரைமயிர்கள்
திருந்தன. இவனைப் பார்த்தால், நாற்
வயது என்று யாரும் மதிக்கமாட்டார்கள்,
இருபது ஆண்டுகளாவது அதிகமாக
கணக்கிடுவார்கள். மேஜைமேல் சாய்ந்தி
தலைக்குமேல், கைதி எழுதிய தாள் ஒ
கிடந்தது.

"பாவம்! நல்ல உறக்கத்தில் இருக்கிற
ஒருவேளை தனக்குக் கிடைக்கப்போகும் ல
ரூபாயைப் பற்றிக் கனவுகண்டுகொண்டி
தாலும் இருப்பான். இவன் இருக்கிற உ
நிலையில்—அது பாதி செத்த நிலை—த
ணையை எடுத்து முகத்தின்மீது அழுத்தி
போதும். மிகுந்திருக்கும் உயிரும் போய்வி
எப்படிச் செத்தான் என்று கண்டுபிடிக்க
முடியாது. சரி! அதோ ஏதோ, எழுதி

திருனே, அது என்னவென்று பார்க்கலாம்" மேஜைமேலிருந்த தாளைப் பாங்கர் எடுத்தார்.

மிகச்சிறிய எழுத்துக்களில் கைதி எழுதி ருந்தான்.

"நாளைக் காலை ஆறு மணிக்கு எனக்கு விடுதலை கிடைக்கும், உலகுடன் மீண்டும் ழகும் உரிமை கிடைக்கும். இந்த அறை யைவிட்டு வெளியேறி, காலைக் கதிரவனைக் காணும் முன்பு, உனக்குச் சில சொல்ல விரும் புகிறேன்.

பதினைந்து ஆண்டுகளில் நான் ஏராளமான நூல்களைப் படித்தேன். அவைகளைப் படிக்கும் பொழுது, உலகிலுள்ள பல்வகை இன்பங்கள் —இசையின் இனிமை, காதலின் இன்பம், அன்பின் தன்மை, அறிவின் மேன்மை எல்லா வற்றையும் அனுபவித்தேன். அவற்றின் பலம், நான் பாடினேன், ஆடினேன், காதலித் தேன், வீரதீரங்களைப் புரிந்தேன்...... கவி வாணர்களின் உயர்ந்த கற்பனையில் வளர்ந்த ழில் மங்கையர் பறந்துவந்து காதல் கீதங் களை இசைத்தனர், அந்தப் பனி மொழிகளைக் கேட்டு நான் மயங்கிப்போனேன்... உன் நூல் களினால் இமயத்தின் உச்சியில் நின்றேன், குமரிமுனையில் நின்று கதிர் தாழ்வதையும் கதி எழுவதையும் ஒருங்கே கண்டேன், மேகங் களிடையே பறந்தேன், கடலலைகளிடையே வாழ்ந்தேன். காடுகள், புல்வெளிகள், அருவி கள், ஆற்றோரங்கள், நாடுநகரங்கள் எங்கும் சுற்றினேன்... நீ தந்த நூல்களினால் அற்பு தங்கள் பல புரிந்தேன்; நகரங்களை அழித் தேன், நகரங்களை உண்டாக்கினேன், புதிய கருத்துக்களைப் பரவச்செய்தேன், உலக நாடு களையெல்லாம் நான் ஒருவனுகவே வென் றேன், பழைய உலகைச் சாய்த்தேன், புதிய உலகை உண்டாக்கினேன்.

உன்னுடைய நூல்கள் அறிவுச் செல்வங் களை வழங்கின. சிறந்த மணிகளை, அழியாத சொத்துக்களை என் மூளையாகிய சிறு பேழைக் குள் அடக்கினேன். உங்களையெல்லாம்விட மேம்பட்டவன் என்ற நம்பிக்கை எனக்கு வந்து விட்டது.

நீங்கள் எவற்றையெல்லாம் உயர்வாகக் கருதுகிறீர்களோ, அவற்றை நான் துச்சமாக மதிக்கிறேன். உங்கள் பைத்தியக்காரத்தன த்தில், பல தவறுகளைச் செய்கிறீர்கள். உண் மையிலிருந்து நீங்கள் வெகுதூரம் சென்று விட்டீர்கள். உங்களுடைய பயங்கர நிலையைப் புரிந்துகொள்வது கடினம் புரிந்துகொள்ள நான் விரும்பவும் இல்லை.

உங்களுடைய வாழ்க்கை நிலை, மதிப்பு, எல் லாவற்றையும் நான் வெறுக்கிறேன். அதற்கு அறிகுறியாக எனக்கு வரவேண்டிய ஒரு லட்ச ரூபாயை தள்ளிவிடப்போகிறேன். ஒருகாலத் தில், ஒரு லட்சரூபாய் என்றால் பெறற்கரிய பேறு என்று நினைத்தேன், இப்பொழுது அது ஒரு பெரும் பீடை என்று நினைக்கி றேன். நாளைக் காலை 5-55 மணிக்கு, ஆறு மணிக்கு ஐந்துநிமிடம் முன்னதாக இந்த இடத்தைவிட்டுப் போய்விடுவேன். அப்படிப் போவதால், ஒப்பந்த விதிகளை நான் மீறியவ னுவேன். நீ எனக்கு ஒரு லட்சரூபாய் கொடுக் கவேண்டிய பொறுப்பிலிருந்து விடுபடுவாய்."

இந்தக் கடிதத்தைப் படித்து முடித்ததும் சோமசுந்தரத்தின் கண்களிலிருந்து நீர் வழிந் தது; கடிதத்தை மேஜைமேல் முன்போல வைத்துவிட்டு, கைதியின் காலைத் தொட்டுக் கும்பிட்டார். வந்தவழியே திரும்பினர்.

படுக்கையில் படுத்தும், அவருடைய கண் களிலிருந்து நீர் வடிந்துகொண்டிருந்தது. அத் தகைய உத்தமனை—உயர்ந்தவனைக் கொல்லப் போனது—சே! தன்னைத்தானே அவர் வெறுத்துக்கொண்டார்.

விடியற்காலையில் காவற்காரன் ஓடிவந்து, கைதி ஜன்னல் வழியாக வெளியேறி, தோட் டத்துச் சுவரைச் தாண்டிப்போனதைப் பார்த் ததாகச் சொன்னன். கண் மூடாமல் படுத் திருந்த பாங்கர், பக்கத்துவீட்டுக்காரர்களையும், சாட்சிகளையும் அழைத்துக்கொண்டு, தோட் டத்துக்குப் போனர். அங்கு அறை காலியா கக்கிடந்தது. மற்றவர்களுக்குத் தெரியாமல் மேஜைமேலிருந்த கடிதத்தை பாங்கர் எடுத்து வந்து, தனது இரும்புப்பெட்டிக்குள் பத்திரப் படுத்திக்கொண்டார்.

[ரஷ்ய எழுத்தாளர் ஆன்டன்செகாவ் எழுதிய சிறு கதை ஒன்றின் தழுவல்.]



உணராதவர் உணருகிறார்

1938-ஆம் ஆண்டில் ஆச்சாரியார் சென்னை மாநிலத்தின் முதலமைச்சராக இருக்கும் போது, எல்லாப் பள்ளிகளிலும் முதல் பிரிவிலிருந்து மூன்றாம் பிரிவு வரையில் இந்தியைக் கட்டாயப்பாடமாக்குவேன் என்று பிடிவாதத்தோடு கட்டளை பிறப்பித்தார். கட்டாய இந்திக்குத் தமிழகம் எங்கணும் "எதிர்ப்பு மூண்டது. எதிர்ப்பினைக் கண்டு முழுக்கப் பின்வாங்கவும் முடியாமலும், தம் முழு ஆதிக்கத்தைச் செலுத்தவும் முடியாமலும் திண்டாடித் திணறிப்போய் இறுதியில் நூறு பள்ளிகளில் கட்டாயப் பாடமாகப் புகுத்தினார். மூண்டெழுந்த எதிர்ப்பு அந்தத் திட்டத்தையும் பிற்பாடு தவிடுபொடியாக்கிற்று.

இந்தி மொழியே தென்னாட்டிற்குத் தேவையில்லை; அதுவும் கட்டாய இந்தி அறவே தேவையில்லை என்பதற்கான காரணகாரிய விளக்கங்களை இந்தி எதிர்ப்புத் தலைவர்கள் மக்கள் மன்றத்தின்முன் வைத்தார்கள். வடவர் ஆதிக்கம் எல்லாத்துறைகளிலும் நிலைபெறுவதற்குத்தான் இந்தி பயன்படும், அந்த எண்ணத்தின் அடிப்படையில்தான் இந்திமொழி வெறியர்கள் வேலைசெய்துவருகிறார்கள் என்று நாம் அடிக்கடி வற்புறுத்திச் சொல்லி வந்தாலும், காங்கிரசுக்காரர்கள் அதற்குச் செவிகொடுக்கவே மறுக்கின்றனர். நாம் சொல்லிடும் கருத்துக்களைக் காங்கிரசுக்காரர்கள் உடனுக்குடன் ஏற்றுக்கொள்ள மறுத்தாலும், பிற்பாடு என்றேனும் ஒருநாள் அவற்றை ஒப்புக்கொள்ளும் நிலைக்கு அவர்கள் வந்தே தீருவர் என்பதையும் அவ்வப்போது உணர்த்தி வருகிறோம்.

எந்தச் சக்ரவர்த்தி இராசகோபாலாச்சாரியார் இந்தியைக் கட்டாயப்பாடமாகப் புகுத்துவேன் என்று கூவினாரோ—கொக்கரித்தாரோ, அந்த இராசகோபாலாச்சாரியார், இன்று இந்தியைக் கட்டாயம் ஆக்கும் முயற்சியை எதிர்க்கிறார், இந்தி மொழி வெறியர்களின் வெறியுணர்ச்சியைக் கண்டிக்கிறார் என்று அறியும்போது, அந்த நிலை கண்டு, ஆச்சாரியார் வழிக்கு வருகிறார் சிறிது சிறிதாக, அந்த அளவுக்குக் காலம் அவரைத் திருத்தியுள்ளது என்று எண்ணி நாம் பெருமித மகிழ்… கொள்ளாமலிருக்க முடியவில்லை.

17-4-55-இல் வெளிவந்துள்ள ‘கல்கி’ இதழில் சக்ரவர்த்தி இராசகோபாலாச்சாரியார் “பாஷைப் பிரச்னை” என்று தலைப்பிட்டு கட்டுரை ஒன்று தீட்டியுள்ளார். அதில் அவர் குறிப்பிட்டுள்ள கருத்துக்களில் பொறுக்கு மணிகளாக உள்ளவைகளை அவர் சொற்களிலேயே கேளுங்கள். அவை வருமாறு:

“ஒரு குறிப்பிட்ட பாஷையைப் பேசுகிறவர்கள் தங்கள் பாஷையைக் கற்கவேண்டும் என்று மற்றொரு சமூகத்தாரைப் பலாத்காரம் செய்வது அன்பு முறைக்கு மாறுபட்ட செயலாகும். அது வெற்றி பெறாது. ஒரு சர்க்கார் புது வரி ஒன்றைக் கொடுக்கச் சொல்லலாம். கொடுக்க இஷ்டம் இல்லாதவர்களை வற்புறுத்தியும் வசூலிக்கமுடியும். ஆனால் ஒரு குறிப்பிட்ட புது பாஷையைக் கற்றுக்கொள்ளவேண்டும் என்று சொல்லுவது வெறுப்பிலும் துவேஷத்திலும் முடியும்.”

“அரசியல் சட்டத்தில் ஹிந்தி அமுலுக்கு வருவதற்காக ஒரு தேதியைக் குறிப்பிட்டிருப்பது உண்மை. திருத்த வேண்டுமானால், அந்தக் கெடுவைத் திருத்த வேண்டுமே ஒழிய, அதை வைத்துக்கொண்டு மிரட்டுவது தவறு.”

“இப்போது பெரிய உத்தியோகங்களுக்கு அரசாங்கத்தில் பொறுப்பு வாய்ந்த ஸ்தானங்களுக்கு, அன்னிய பாஷையில், தமிழருக்கு அன்னியமான பாஷையில்தான் எல்லாப் பரீட்சையும் செய்வோம், அதில் தேறியவர்களைத்தான் ஸ்தானங்களுக்கு எடுப்போம் என்று சொன்னால் யாருக்குத்தான் கோபம் வராது. எனக்குமே கோபந்தான்.”

“தமிழ்க் குழந்தைகள் ஹிந்தியைப் படித்து விடுவார்கள். சந்தேகமில்லை. சந்தேகம் எதுபற்றியென்றால், இன்னும் பால் குடிக்கும் பருவம் தீராத ஹிந்திபாஷையைப் பற்றித்தான். ஹிந்தி பாஷையானது

இந்தியாவின் வருமானம்

இந்தியத் துணைக்கண்டத்தின் மொத்த ...கள் எண்ணிக்கை 1951-ஆம் ஆண்டில் ...த்த கணக்குப்படி 35,68,29,485 ஆகும். ...1-52 ஆகிய ஓராண்டு காலத்தில் இந்தியா ...லுள்ள எல்லோர்க்கும் கிடைத்த வருமா... ரூ. 9990 கோடியாகும். இந்த வருமா...த்தை' இந்தியாவிலுள்ள எல்லோர்க்கும் சமமாகப் பிரித்தால், ஆள் ஒன்றுக்கு ...274½ தான் கிடைக்கிறது. இதைத்தான் ...தியாவின் ஓராளின் ஒரு ஆண்டின் சராசரி ...மானம் என்று சொல்லுவர்.

...தே நிலையில் பார்த்தால் அமெரிக்காவின் ...ஆளின் சராசரி வருமானம் ரூ. 10,000-க்கு ...லும், இரசியாவில் ரூ. 5000-க்கு மேலும் ...டக்கின்றன. செல்வத்தை உண்டாக்குவ...் வைதீகர்களால் கருதப்படும் கற்பனைக் கடவுளான திருமகளுக்கு அளிக்கப்படும் வந்த...னையும் வழிபாடும் இந்தியத் துணைக்கண்டத்...தைப்போல் உலகில் வேறு எங்கும் காணமுடியாது. திருமகளின் படத்தை வீடுகளிலும், கடைகளிலும், தொழிற்சாலைகளிலும், அலுவலகங்களிலும் கொண்டிராத இந்து மக்கள் இந்தியாவிலே மிகமிகக் குறைவாரும். திருமகளின் ஏகபோக 'அருள்' இந்தத் துணைக்கண்டத்திற்கு இருந்தும், சராசரி ஒரு ஆளின் ஆண்டு வருமானம் ரூ. 274½ தான்! ஆனல் தனித் 'திருமகளின்' வழிபாடு அறவே இல்லாத அமெரிக்காவின் சராசரி ஆண்டு வருமானமோ இந்தியாவைப்போல் நாற்பது மடங்கு மிகவாக இருக்கிறது! அங்கே 'முயற்சி' வருமானத்தைப் பெருக்கிக் கொண்டே போகிறது: இங்கே 'பக்தி' தாழ்ந்த நிலையிலேயே இருத்திவைக்கிறது!

...ற்போது பலவீனமான நிலையில் இருக்...றது. ஆங்கிலத்துக்குச் சமம் இல்லை என்...தில் வியப்பில்லை. தமிழுக்கும் சமம் இல்லை ...ன்பதில் வியப்பில்லை. தமிழுக்கும் சமம் ...ல்லை. வங்காளி பாஷைக்கும் சமம் இல்லை. ...ராட்டி பாஷைக்கும் சமம் இல்லை. இந்த ...லையில் செய்யவேண்டிய கடமை என்ன? ...மிழ்க் குழந்தைகளை மிரட்டுவது அல்ல. ...ஹிந்தி பாஷையை மிரட்டி அதைக் கொஞ்...ம் மேலே தூக்கவேண்டும்! எல்லா விஷ...ங்களிலும் ஹிந்தி பாஷை மூலமே பரீட்சை ...சய்யும் அந்தஸ்துக்கு இன்னும் ஹிந்தி ...ரவில்லை."

"மொழியின் வறுமையும், வளர்ச்சிக் ...றைவும், திட்டமான பொருளில் சொற்...ளைப் பிரயோகிக்கும் வழக்கம் இன்னும் ...ந்தியில் ஏற்படாமலிருப்பதுமே இந்தக் ...டத்துக்குக் காரணம். ஆனபடியால் ...மிழ் மக்களைப் பள்ளிக்கூடம் போகச்சொல்...தைப் பார்க்கிலும், ஹிந்தி மொழியைப் ...ள்ளிக்கூடம் போகச்சொல்லுவது 'முதற் ...மை. பரீட்சையில் தேறவேண்டியது ...மிழ்க் குழந்தைகள் அல்ல. ஹிந்தி பாஷை ...னது பரீட்சையில் முதலில் தேறி ஆக ...ண்டும்."

"உத்தரப் பிரதேசத்தில் இருக்கும் மக்க...டம் போய் 'தமிழ் மிக நல்ல பாஷை. ஆரிய நாட்டின் பண்பாடு நிறைந்துள்ள பழைய பாஷை. இதை நீங்கள் படித்துத் தேர்ந்தால்தான் உங்களுக்கு உத்தியோகம்' என்று சொன்னல் அவர்களுக்கு எப்படியிருக்கும்? உள்ளம் பதைக்கும் அல்லவா?"

"'மற்றவர்கள் உடலில் உன் உயிரை வைத்துப் பார்; உன் உடலில் மற்றவர்கள் உயிரை வைத்துப் பார். அப்படிப் பார்த்தாயாகில் பின் கோபம் ஏது; வருத்தம் ஏது?' என்று ரிஷிகள் உபநிஷத்தில் சொன்னர்கள் அல்லவா? இதை நம்முடைய ஜன நாயகத் தலைவர்கள் பார்த்துப் படித்து அவசரப்படாமலிருக்கவேண்டும்."

"மிகப் பிற்போக்கான தென் ஆப்பிரிக்க அரசாட்சியிலுங்கூட, ஆங்கிலப் பாஷையைப் புறக்கணித்துவிட்டு, டச்சுக் கலப்பான போயர் பாஷையையே அவர்கள் வற்புறுத்தவில்லை. அதைவிடவா நம்முடைய ஏக பாஷைப் பித்தர்களின் அவசரப் பைத்தியம் முற்றவேண்டும்?"

கட்டாய இந்தியின் தன்மையை அன்று உணராத ஆச்சாரியார் இன்று உணர்கிறர் ஓரளவுக்கு. அந்த அளவில் மகிழ்ச்சி! காலம் செல்லச்செல்ல நமது கருத்து முழுவதையும் உணருவார் என்று எதிர்பார்க்கிறேம்!

1950—51-ல் இந்தியாவின் மொத்த நாட்டு வருமானம் ரூ. 9530 கோடியாகும். அந்த ஆண்டின் ஒரு ஆளின் சராசரி வருமானம் ரூ. 265·2. நாட்டின் மொத்த வருமானம் ரூ. 9530 கோடி எவ்வெவ்வழிகளில் கிடைக்கின்றது என்பதைக் கீழ்க்கண்ட அட்டவணையின் மூலம் அறிந்துகொள்ளலாம்.

இந்தியத் துணைக்கண்டத்தில் (யூனியனின்) தொழில்கள் மூலம் கிடைக்கும் மொத்த நாட்டு வருமானம்

விபரம்	1950—51-ல் ரூ. கோடிக் கணக்கில்.
1. உழவுத் தொழில்-கால்நடைகள் வளர்ப்புபற்றிய எல்லாத் துறைகளும்	4780
2. காடுகள்	70
3. மீன்பிடிப்பு	40
4. சுரங்கங்கள்	70
5. பெருந் தொழிற்சாலைகள்	550
6. சிறிய தொழிற்சாலைகள்	910
7. தபால்தந்தி போக்குவரத்துக்கள்	40
8. புகைவண்டிகள்	180
9. வங்கிகள்—இன்சூரன்சுகள்	70
10. பிறவாணிகம் போக்குவரத்து மூலம்	1400
11. சம்பளவேலைகள் கவின்கலைகள்	470
12. அரசாங்க வேலைகள் (நிருவாகம்)	430
13. வீட்டு வேலைகள்	130
14. வீட்டுச் சொத்துக்கள்	410
ஆகமொத்தம்	9550
வெளிநாடுகளிலிருந்து பெறும் வருவாய்	20
எனவே இந்தியாவில் மட்டும் வருமானம்	ரூ. 9530

இந்தியத் துணைக்கண்டத்தில் தொழில் செய்து வருமானம் தேடுவோரின் எண்ணிக்கை ஏறத்தாழ **14¼** கோடி பேர்கள். மொத்தம் **35½** கோடி மக்களில் ஏனைய **21¼** கோடி மக்கள், **14¼** கோடி மக்களின் வருமானத்தை நம்பித்தான் உயிர் வாழ்கிறார்கள்.

மொத்தம் தொழில்செய்யும் 14,32,21,000 பேர்கள் கீழ்க்கண்டவாறு பல்வேறு தொழிற்றுறைகளில் ஈடுபட்டுள்ளார்கள்.

விபரம்	1951-ல் ஆயிரக் கணக்கில்
1. உழவு—கால்நடை	1,02,711
2. காடு	350
3. மீன்பிடிப்பு	579
4. சுரங்கம்	780
5. பெருந்தொழிற்சாலை	2969
6. சிறிய தொழிற்சாலைகள்	11521
7. தபால் தந்தி போக்குவரத்து	
8. புகைவண்டி	1
9. வங்கி—இன்சூரன்சு	
10. பிற வாணிகம்—போக்குவரத்து	9
11. சம்பளவேலை—கவின்கலை	6
12. அரசாங்க நிருவாகம்	3
13. வீட்டுசவலைகள்	2
14. வீட்டுச் சொத்துக்கள்	
ஆகமொத்தம்	143

மொத்தம் தொழில் புரிவோரில் 100-க்
பேர்கள் விவசாயத்தைச் சார்ந்த துறை
லும், 11 பேர்கள் சுரங்கம்—ஆலை—சி
தொழிற்சாலை போன்றவைகளிலும், மீதி
பேர்கள் பிற துறைகளிலும் ஈடுபட்டிருக்
றனர்.

விவசாயத்தில் ஈடுபட்டிருப்போரின் எ
ணிக்கை சிறிதுசிறிதாகக் குறைந்து, பொ
உற்பத்தித் தொழிற்சாலைகளின் எண்ணிக்
வளர்ந்துகொண்டே சென்றால்தான் நாட்
சராசரி வருமானம் ஏறுவதற்கு வழிவ
ஏற்படும். பொறிகளின் (இயந்திரங்கள்
உதவியைத் தேவையான அளவுக்
பயன்படுத்திக்கொள்ள இந்தியா இன்ன
சரியாகக் கற்றுக்கொள்ளாத காரணத்
தான் மிகமிகத் தாழ்ந்த நிலையில் கிடக்கிற
மனிதன் செய்யவேண்டிய வேலைகளைச்
யப் பொறிகள் தயாராக இருக்கின்றன
ரல், அப்படிப்பட்ட வேலைகளைப் பொ
ளிடத்து விட்டுவிட்டு, மனிதன் பொறிகள
செய்யமுடியாத பிற வேலைகளைக் கவனி
முன்வரவேண்டும். அப்பொழுதுதான் ம
னின் உழைப்பு குறையும், பயன் மிகும், ஓ
நேரம் கிடைக்கும், இன்பவாழ்வு பெரு
எந்த ஒரு தொழிலையும் பொறிகளிடத்து
மாட்டேன், எல்லா தொழில்களையும் கை
லேயே செய்துகொள்வேன் என்று எந்த
நாடாவது பிடிவாதம் காட்டுமேயானால், அ
நாடு வரவரக் கீழ்நோக்கிச் செல்வதாகு
ஒழிய மேல் நோக்கிச் செல்வதாகாது.

மக்கள் இன்பவாழ்வு வாழவேண்டுமா
அவர்களது வாழ்க்கைத்தரம் உயரவேண்
வாழ்க்கைத்தரம் உயரவேண்டுமானால் ந
டின் வருமானம் பெருகவேண்டும்; வருமா
பெருகவேண்டுமானால், பொருளுற்பத்
பெருகவேண்டும்; பொருளுற்பத்திப் பெ
வேண்டுமானால் பொறித்தொழில்கள் பெ
வேண்டும்! பொருளாதாரச் சமத்துவ நே
கங்கொண்ட ஆட்சிமுறை இந்தக் குறிக்கோ
களை விரைவில் அடைய உதவி செய்வத
இருக்கும்.

வினாவும் விளக்கமும்

ா : வடநாட்டு முதலாளிகளை மட்டும் வெறுத்துப் பேசி ஆங்கில—அமெரிக்க—தமிழ்நாட்டு முதலாளித்துவ ஏகாதிபத்தியத்திற்குத் தி. மு. கழகம் ஆதரவு தருவதேன்?

விளக்கம் : தி. மு. கழகத்தவர்கள் கூறும் ருத்துக்களைச் சரிவர புரிந்துகொள்ளும் றனற்றவர்களே மேற்கண்ட கேள்வியை டிக்கடி எழுப்புகின்றனர்.

தி. மு. கழகத்திற்கு வடநாட்டு முதலாளி ர் பகைதரும் பங்காளிகளுமல்லர்; ஆங்கில அமெரிக்க—தமிழ்நாட்டு முதலாளிகள் ன்பு வளர்க்கும் மைத்துனர்களுமல்லர்!

ஆங்கில—அமெரிக்க—தமிழ்நாட்டு முதலா களுக்குத் தி. மு. கழகம் எப்படி, எங்கு, ப்பொழுது ஆதரவு கொடுத்தது என்பதைக் கள்வி கேட்போர் சுட்டிக்காட்டுவார்களே ானல், அதில் நல்லறிவு பொதிந்துகிடப்ப ாக நாம் கருதலாம். ஆதாரம் ஏதுமின்றி, ழகத்தின்மீது மாசு கற்பிக்கவேண்டும் என்ற ப எண்ணத்துடன் ஏதேதோ உளறிக் காட்டுபவர்களே இத்தகைய கேள்வியை ழுப்புகின்றனர்.

திராவிடத்திலுள்ள எல்லாவகை முதலா த்துவ ஏகாதிபத்தியமும் ஒழியவேண்டும் ன்றுதான தி. மு. கழகம் பலகாலும் பறை ற்றிவருகிறது. வெளிநாட்டு முதலாளிகள் திக்கம் முதலில் ஒழிக்கப்படவேண்டும் என் ம், உள்நாட்டு முதலாளிகள் ஆதிக்கம் டுத்து ஒழிக்கப்படவேண்டும் என்றும் கூறு றது.

வெளிநாட்டு முதலாளிகளில்; வடநாட்டு தலாளிகளை எந்த அளவுக்கு வெளியேற்ற வண்டும் என்று தி. மு. கழகம் கருதுகிறதோ தே அளவுக்குச் சற்று அதிகமாகத்தான் ங்கில—அமெரிக்க முதலாளிகளையும் வெளி பற்ற அது பாடுபடுகிறது.

வட நாட்டு முதலாளிகள் வெளியேற்றப்படு றர்கள் என்றால், அதற்கு முன்பே ஆங்கில- மெரிக்க முதலாளிகள் வெளியேற்றப்படு கிறார்கள் என்று பொருள். ஏனெனில் ஆங்கில—அமெரிக்க முதலாளிகள் என்றென்றும் இந்த நாட்டில் உரிமைகொண்டாடி வாழமுடியாது. அவர்கள் இந்த நாட்டில் தொழில் நடத்தி—வாணிகம் செய்து சுரண்டுகிறார்கள் என்றால், அதனை அவர்கள் தங்களின் பிறப்புரிமையின் காரணமாகச் செய்யவில்லை; இந்தியக் காங்கிரசு சர்க்கார் அளித்துள்ள அனுமதியின்பேரில்தான் சுரண்டுகிறார்கள். எந்த நொடியில் அனுமதி மறுக்கப்பட்டாலும், அவர்கள் வெளியேற வேண்டியவர்களே ஒழிய, இருந்து உரிமை கொண்டாடக்கூடியவர்களல்லர். எனவேதான், அவர்களை வெளியேற்றுவது போராடிச் செய்யவேண்டிய செயலல்ல; எந்த வேளையிலும் சட்டத்தின் மூலம் செய்துவிடக்கூடிய ஒன்றே. இன்று காங்கிரசுக்காரர்கள் தயவில்தான் அவர்கள் சுரண்டி வாழ்கிறார்கள். அவர்கள் உரிமையோடு சுரண்டவில்லை; அனுமதியின்பேரில் சுரண்டுகிறார்கள். ஆனால் வடநாட்டவர்களோ பிறப்புரிமையின்பேரில் இங்கு சுரண்டிப் பிழைக்கிறார்கள். அவர்களை வெளியேற்றுவது என்றால், அனுமதியை ஒழித்துவிடுவது மட்டும் போதாது. அவர்களுக்குத் திராவிடத்தில் இருக்கும் பிறப்புரிமையையும் ஒழித்துக் கட்டியாகவேண்டும். எனவேதான் அவர்கள் வெளியேற்றப்படுவதை மிகவும் தெளிவாக்கி வற்புறுத்திக் கூறவேண்டிய நிலையில் தி. மு. கழகம் இருக்கிறது. எனவேதான் வடநாட்டு முதலாளிகள் ஒழிகிறார்கள் என்றால், ஆங்கில—அமெரிக்க முதலாளிகள் தாமே அதற்கு முன் ஒழிக்கப்படுகிறார்கள் என்று பொருள் என்று கழகம் கூறுகிறது.

தமிழ்நாட்டு—திராவிடநாட்டு முதலாளிகள் பின்னால் ஒழிக்கப்படவேண்டியவர்கள் என்று சொல்லுவதற்குக் காரணம், அவர்கள் சுரண்டும் பணம் திராவிட நாட்டிலேயே தங்கும் பொருளாகும். அவர்களிடத்திலேயோ அல்லது அவர்கள் வாரிசுகளிடத்திலேயோ அவர்கள் சுரண்டிய பொருள் முழுவதையும் தம்பிடி விடாமல் கணக்குப்பார்த்துப் பிடுங்கிக்கொள்ளலாம். ஆனால் வெளிநாட்டு முதலாளிகள் சுரண்டும் பொருள் இந்த நாட்டைவிட்டே

அகன்று வெளிநாடுகளுக்குப் போய்ச் சேர்ந்து விடுகிறது: அவர்களது சுரண்டல் திராவிடத்தை வறட்சியாக்கிவிடும் காரணத்தால் தான், முதலில் அவர்கள் விரட்டப்படவேண்டும் என்று கழகம் சொல்லுகிறது. கழகம் எல்லா முதலாளிகளும் ஒழியவேண்டும் என்றுதான் சொல்லுகிறது; முதலில் ஒரு சாராரையும், பிறகு ஒரு சாராரையும் ஒழிக்க முயலுகிறது.

ஃ ஃ ஃ

வினா: திராவிட முன்னேற்றக் கழகந்தான் திராவிட நாட்டின் உண்மையான பொதுவுடைமையியக்கம் என்று முன்னாள் பொதுச்செயலாளர் சி. என். அண்ணாதுரை கூறினாரே, அப்படியானால் நாட்டின் சொத்துக்கள் எல்லாவற்றையும் எல்லோர்க்கும் சரிசமமாகப் பங்கிட்டுக் கொடுத்துவிடுமா கழகம்?

விளக்கம்: திராவிட முன்னேற்றக் கழகந்தான் திராவிட நாட்டிற்கேற்ற உண்மையான பொதுவுடைமையியக்கம் என்று அறிஞர் அண்ணாதுரை அவர்கள், 1951 ஆம் ஆண்டில் சென்னையில் நடைபெற்ற கழகத்தின் மாநில மாநாட்டில், தம் தலைமையுரையில் வெளியிட்டது உண்மையே. பொதுவுடைமைக் கொள்கைகளை எப்படித் திராவிடத்தில் நடைமுறைப் படுத்துவது என்பதற்கான விளக்கங்களைத், திராவிடத்தின் நிலைமைகளைப் பார்த்துப் பெறக் கழகம் முற்படுகிறதேயல்லாமல், திராவிடத்தின் நிலைமைகளைப் புறக்கணித்துவிட்டு இரசியாவின் நிலைமைகளையே அடிப்படையாகக்கொண்டு பெற ஒருநாளும் விரும்புவதில்லை. இரசியாவுக்கு ஏற்ப இரசியத் தலைவர்கள் தீட்டும் திட்டங்கள் திராவிடத்திற்கு முழுக்க முழுக்கப் பொருந்தும் என்ற குருட்டுத்தனமான அரசியல் மூடநம்பிக்கையைக் கழகம் முழுக்க முழுக்க வெறுக்கிறது. இரசியாவுக்கும் திராவிடத்துக்கும் பொருந்திவரக்கூடிய சில பொதுப்படையானத் துறைகளில் வேண்டுமானால் இரசியாவின் சில பல முறைகள் ஒத்துவரலாமே ஒழிய, எல்லாவற்றிற்கும் எப்பொழுதும் இரசிய திசையை நோக்கித் தெண்டனிட்டு நிற்கும் அரசியல் மூடநம்பிக்கைக்கு ஆளாகத் தி. மு. கழகம் இசையவில்லை. பொதுவுடைமைக் கொள்கைகளை இரசியா தனக்கேற்றமுறையில் கையாளுகிறது; அதுபோல், திராவிடம், அவைகளைத் தனக்கேற்ற முறையில் கையாளவேண்டும் என்பதுதான் கழகத்தின் கொள்கை. அப்படித் திராவிடத்திற்கேற்ற பொதுவுடை வழியை வகுக்கும் கொள்கைவலிவும், ஆற்ற திறனும் திராவிட முன்னேற்றக் கழகத்தி தான் உண்டு திராவிடநாட்டைப் பொறுத் வரையில், என்பதைத்தான், அறிஞ அண்ணா அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளார்க எனவே, தி. மு. கழகம், திராவிடத்தி பொதுவுடைமை இயக்கம் என்பதில் கேள் கேட்கும் நண்பருக்கு எள்ளளவும் ஐயப்பா வேண்டாம்.

நாட்டின் சொத்துக்களை யெல்லாம் எ லார்க்கும் சரிசமமாகப் பங்கிட்டுக் கொடுத் விட்டு அந்த அளவிலேயே அமைந்துவி வதுதான், பொதுவுடைமைக் கொள் என்று யாரேனும் கருதிக்கொண்டிருப்ப களேயானால், அவர்கள் அறியாதவர்களே.

நாட்டின் பொதுமக்கள் பொதுப்படையாக் தொடர்பு கொள்ளும் பொதுச் சொத்துக்க எல்லாவற்றையும், நாட்டின் மக்களாட் அரசாங்கத்தின் உடைமையாக்கிச், 'சக் **கேற்ற உழைப்பினை'** எல்லோரிடமும் பெறுவது **'தேவைக்கேற்ற வசதிகளை'** எல்லோர்க்கும் வழ குவதும் ஆன இன்றியமையாக் கடமை நாட்டின் அரசாங்கம் நிறைவேற்றிவைப்ப தான் பொதுவுடைமை ஆட்சி எனப்படும்!

'சக்திக்கேற்ற உழைப்பு; தேவைக்கேற்ற வசதி' இது பொதுவுடைமைக் கொள்கையாகும்.

'சக்திக்கேற்ற உழைப்பு; உழைப்புக்கே ஊதியம்'—இது சமதர்மக் கொள்கையாகும்.

'கேட்கும் உழைப்பைச் செய்யவேண்டும்; கொ கும் ஊதியத்தை ஏற்கவேண்டும்'—இது முதலாளி துவக் கொள்கை.

இந்த மூன்றுவிதக் கொள்கைகளில் முத ளித்துவக் கொள்கையைத் தி. மு. கழ முழுக்கமுழுக்க வெறுக்கிறது. மற்ற இரண் கொள்கைகளில் சமதர்மக் கொள்கை முதலில் நடைமுறைப்படுத்திப் பின்னர் ப படியாகப் பொதுவுடைமைக்கொள்கை நடைமுறைப்படுத்தவே கழகம் விரும்புகிற சமதர்மக் கொள்கை மூலந்தான் பொதுவு மைக் கொள்கையை எட்டிப்பிடிக்க இயலு யொழிய, நேரடியாக எடுத்தவுடனேயே பொ வுடைமைக் கொள்கைக்குத் தாவிவிட மு யாது. இது இயல்பான முறை.

ஒரு நாட்டில் நூறுபேர் இருந்து, நூ கறவைமாடுகளும் இருந்தால், அந்த நூ மாடுகளையும் நூறுபேருக்கும் பிரித்

காடுத்துவிடுவதுதான் பொதுவுடைமையா ன்னும் கருத்துப்பட இந்தக்கேள்விகேட்கும் முன்பரைப்போன்றவர்கள் கேட்கிருர்கள். அது அப்படியல்ல! அப்படிப்பட்டவர்கள் பாதுவுடைமையைத் தவருகப் புரிந்து காண்டிருப்பவராவார்கள். நூறு கறவை மாடுகளை நூறுபேருக்குப் பிரித்துக்கொடுத்து விட்டு, அந்த அளவிலே அமைந்துவிட்டால், சிறிது நாட்கள் கழித்துப் பார்க்கும்போது, வலிவுள்ளவன் வலிவற்றவர்களிடமுள்ள மாடு களை யெல்லாம் வலுக்கட்டாயமாகப் பிடுங்கிக் கொண்டு பலரை வறியவர்களாக விட்டுவிடு வான்; மீண்டும் பணக்காரன் ஏழை என்ற இரு பிரிவினரும் ஏற்பட்டுவிடுவர். இப்படிப்புரிந்து கொண்டிருப்பது பொதுவுடைமையாகாது. பின் எதுதான் பொதுவுடைமை என்ருல், நூறு கறவை மாடுகளையும் நூறுபேருக்கும் பொதுவாக உரிமையாக்கி, அவரவர் அறிவு ஆற்றலுக்கு ஏற்ப சிலர் மாடுகளைக் குளிப் பாட்டும் பொறுப்பையும், சிலர் மாடுகளுக்குக் காட்டில்போடும் பொறுப்பையும், சிலர் அவைகளுக்குப் புல் பிடுங்கும் பொறுப்பை யும், சிலர் அவைகளிடம் பால் கறக்கும் பொறுப்பையும், சிலர் கறந்த பாலைக் காய்ச்சும் பொறுப்பையும், சிலர் காய்ச்சிய பாலை அவ ரவர் வயிற்றுப் பசிக்கேற்பப் பங்கு பிரிக்கும் பொறுப்பையும், சிலர் மிச்சப்பட்ட பாலை மீண் டும் பயன்படுத்தும் பொறுப்பையும் ஏற்று எல்லோரும் அவரவர் தேவைக்கேற்றபடி கொண்டு மகிழ்ந்திருப்பது ஆகும்.

பொதுவுடைமை என்ருல், தனித்தனிப் பங்குபிரித்துவிட்டுவிடுவது அல்ல, பொது உழைப்பு, பொது உற்பத்தி, பொதுப் பங்கீடு, பொது உரிமை, பொதுமக்களாட்சி ஆகிய இத்தகைய தன்மைகளை உள்ளடக்கிக்கொண்டதாகும். இத்தகைய பொதுவுடைமையை நோக்கி த்தான் தி. மு. கழகம் விரும்புகிறது.

ஃ ஃ ஃ

வினு : "ஒருவன் தன் உயிரை எப்படிக் காணமு யாதோ, அப்படித்தான் அவன் கடவுளையும் காண முடியாது; ஒருவனுக்கு உயிர் எப்படியிருக் கிறதோ அப்படித்தான் கடவுளும் இருக்கிருர்; உயிரைக் காட்டு என்று கேட்பவன் எப்படி மடை யனே, அப்படித்தான் கடவுளைக் காட்டு என்று கேட்பவனும் மடையனுவான்?" என்று வைதீகர் கள் கூறுகிருர்களே அதுபற்றித் தங்கள் விளக்கம் என்ன?

விளக்கம் : கடவுள் இயற்கைக்கு மீறிய ஆற்றல் படைத்தவராய், இயற்கையின் சிருட்டிக்கர்த் தாவாய், பக்தனின் குறைகளைக் கேட்பவ ராய், பக்தனுக்கு வேண்டும் வரம் அளிப்பவ ராய், பக்தன் விரும்பினுல் அவனுக்குக் காட்சியளிப்பவராய்த் தனியே மேலுலகத்தில் வாழ்கிருர் என்ற கொள்கையைப் பகுத்தறிவு வாதிகள் மறுக்கிருர்கள், அறிவாராய்ச்சிக்குப் பொருந்திவரவில்லை என்று செப்புகிருர்கள். 'அன்பே கடவுள்', 'அறிவே கடவுள்', 'உண் மையே கடவுள்' 'இயற்கையே கடவுள்' என்று தேற்று 'ஏ'காரம் போட்டுக் கூறுவார்களே யானுல், அந்த 'அன்பு', 'அறிவு', 'உண்மை', 'இயற்கை' ஆகியவை இல்லை என்று மறுப் பவர்களல்லர் பகுத்தறிவுவாதிகள்.

மேலே முதலில் குறிப்பிட்டுள்ளதைப்போல் ஒரு கடவுளை வைதீகர்கள் சொல்லிக்காட்டி, அது இருக்கிறது என்ற உண்மையை விளக் கிக்காட்ட, உயிர் இருப்பதை உவமையாகக் காட்டுகிருர்கள் அவர்கள் என்று அறியும் போது கேலிச் சிரிப்புதான் ஏற்படுகிறது.

உயிரைக் கண்ணுல் காணமுடியாவிட்டா லும், வேறு பல ஆதாரங்களின் அடிப்படை யில் ஒவ்வொருவரும் உணரமுடிகிறது! ஆனுல் வைதீகர்கள் சொல்லும் கடவுளைக் கண்ணுலும் காணமுடிவதில்லை, வேறு எந்த ஆதாரங்களின் அடிப்படையில் நின்றும் அறியமுடிவதில்லை. மனிதனின் அசைவு, இயக்கம், உயிர்ப்பு ஆகியவைகளைக்கொண்டு உயிர் இருப்பதை ஒவ்வொருவரும் உணர்கி ருர்கள்; அசைவு, இயக்கம், உயிர்ப்பு ஆகி யவை அறவே இல்லாதபோது உயிர் இல்லை என்ற முடிவுக்கு ஒவ்வொருவரும் வருகிருர் கள். ஆனுல் கடவுளைப் பொறுத்து எல் லோர்க்கும் ஒருமித்த முடிவு ஏன் ஏற்பட முடிவதில்லை! வைதீகனும், பகுத்தறிவுவாதி இரண்டுபேரும் சேர்ந்தே ஒருவனுக்கு உயிர் இருப்பதையும், அவன் உயிரில்லாத பிணமாக மாறுவதையும் உணரமுடிகிறது; ஆனல் அதுபோல் வைதீகன் உணருவதாகச் சொல் லும் கடவுளைப் பகுத்தறிவுவாதியும் உணரும் படி இருந்தால்தானே, உயிரைக் கடவுளுக்கு உவமையாக்கிக் காட்டுவது பொருந்தும்! உணரக்கூடிய ஒன்றுக்கு உணரமுடியாத ஒன்றை உவமேயமாக்குவது பொருந்தாது! பொருந்தாது!! பொருந்தாது!!! வைதீகர்கள் இந்த எடுத்துக்காட்டோடு பகுத்தறிவுவா

தியை அணுகுவது கேலிச்சிரிப்பிற்குரிய அறியாமை நிரம்பிய செயலேயொழிய, அறிவுடையோர் போற்றும் செயலாகாது!

"கடவுளைக் கண்ணால் காணமுடியவில்லை; எனவே கடவுள் இல்லை" என்று மட்டும் பகுத்தறிவுவாதி கூறவில்லையே! அப்படிக் கூறுகிறான் பகுத்தறிவுவாதி என்று வைதிகன் எண்ணிக்கொள்வானேயானால், அதனால் அவனை அவனே ஏமாற்றிக்கொள்கிறான் என்றுதான் பொருள்படும். "வைதீகன் சொல்லும் அந்தக் கடவுளைக் காணல், கேட்டல், சுவைத்தல், நுகர்தல், உறுதல், உணர்தல் ஆகிய ஆறு அறிவுகளாலும் உணர்வதற்கில்லை; அது வெறும் கற்பனை" என்று ...ான், பகுத்தறிவுவாதி, இதுவரையில் வைதீகர்கள் எடுத்துவைத்த காரணகாரிய விளக்கங்களை ஆராயந்து அறிந்து கூறுகிறான்.

கண்ணால் காணமுடியவில்லை என்பது மட்டுமல்ல, மனிதனின் வேறு எந்த ஐம்புலனறிவாலும் சரி, ஆறாவது அறிவாகிய பகுத்தறிவாலும் சரி உணரமுடியாத ஒரு கற்பனைப் பொருளைத்தான் "கடவுள்" என்று வைதீகன் சுட்டிக்காட்டுகிறான் என்றுதான் பகுத்தறிவுவாதி கூறுகிறான். இதனைக் கூறிடும்போது, " பகுத்தறிவுவாதிக்குப் போதுமான 'பக்குவம்' வரவில்லை; எனவேதான் 'கடவுளை' அவனால் உணரமுடியவில்லை" என்று வைதிகன் கூறிப் பகுத்தறிவுவாதியை மடக்கப் பார்க்கிறான். அப்பொழுதும் வைதீகனின் முயற்சி பகுத்தறிவுவாதியின் வாதத்திற்கு முன்னால் தவிடு பொடியாகச் சிதறி விழத்தான் செய்கிறது.

'கடவுளை' உணரமுடியாத ஒரு பகுத்தறிவு வாதியையும், 'கடவுளை' உணர்ந்துள்ள ஒரு வைதீகனையும் (ஒரே நிலையிலுள்ளவர்களாகப் பார்த்து—அதாவது பத்தாவது வரையிலும் படித்த ஒரு பகுத்தறிவுவாதியையும் பத்தாவது வரையிலும் படித்த ஒரு வைதீகனையும்) ஓரிடத்தில் நிறுத்திப், பகுத்தறிவுவாதிக்கு இல்லாத 'பக்குவம்' வைதீகனுக்கு மட்டும் எப்படி, எந்த உருவில், எந்தநிலையில், எப்பொழுது, ஏன் ஏற்பட்டிருக்கிறது என்பதை விளக்கிக் காட்டவேண்டியது அல்லவா வாதத்திற்கு வரும் வைதீகனின் கடமையாகும்? 'பக்குவம்' அவனுக்கு இருக்கிறது என்று கூறிவிட்டால் போதுமா? அதற்கு என்ன சான்று? எடுத்துக்காட்ட எந்த வைதீகனுக்கு உறுதி உண்டு?

வைதீகனுக்கு ஐம்புலனறிவும், ஆறாவது அறிவும் எப்படி வேலை செய்கின்றனவோ, அப்படியேதான் பகுத்தறிவுவாதிக்கும் வேலை செய்கின்றன. கடவுளை உணர்வதற்கு வை... கனிடத்தில் தனியாக இருக்கும் 'கருவி' என்ன? அந்தக் 'கருவி' பகுத்தறிவுவா... யிடத்தில் மட்டும் எப்படி இல்லாமற்போ... விடும்?

வைதீகன் 'கடவுள்' என்ற ஆராய்ச்சிக்கு பொருந்திவராத ஒன்றைக் கற்பனைசெய்து அது உண்மையானது என்று புளுகுகிறான் என்பதுதான் பெறப்படும் உண்மையாகும். ஆனால் பகுத்தறிவுவாதி தான் அறிவதை அறிந்ததாக—உணர்வதாகக் கூறுகிறான். அறியாததை—உணராததை 'அறியவில்லை' என்று கூறுகிறான்! யார் 'மடையன்' என்ப... விளக்கம் கேட்கும் நண்பருக்கு இப்பொழு... தெளிவாகப் புரியும் என்று கருதுகிறோம்!

இந்தியாவில் நாளிதழ்கள்

இந்தியாவில் எந்தெந்த முக்கியமான மொழிகளில் நாளிதழ்கள் வெளியாகின்றன, எத்தனை இதழ்கள் வெளியாகின்றன, ஒவ்வொன்றிலும் எத்தனைப் படிகள் வெளியாகின்றன என்ற விபரம் வருமாறு:

மொழி	இதழ்கள் எண்ணிக்கை	படிகள் ஆயிரக்கணக்கில்
ஆங்கிலம்	41	697
இந்தி	76	379
அசாம்	1	3
வங்காளி	7	240
குசராத்தி	23	187
கன்னடம்	25	72
மலையாளம்	21	196
மராட்டி	26	191
ஒரியா	3	43
பஞ்சாபி	19	23
தமிழ்	12	168
தெலுங்கு	6	98
உருது	70	213
மொத்தம்	330	2510
சாதாரண மொழிகளிலுள்ள நாளிதழ்கள்	9	15
சீன மொழி	1	0·5
ஆகமொத்தம்	340	2525·5

எனவே இந்தியாவில் அச்சாகும் மொத்த நாளிதழ்கள் **340**; அவைகள் வெளியிடு படிகள் (பிரதிகள்) **25,25,500**!

ரக் கால் சட்டை (ஆப்பேண்ட்)

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

படம்—2

இருந்து 0 வரை 1 அங்.
இருந்து 1 வரை 1 அங்.
இருந்து 2 வரை 1 ,,
17, 15 எண்கள்வரை இணைப்பு)
இருந்து 0 வரை 9 ,,
$\frac{1}{4}$ இடுப்புச் சுற்றளவு $+1\frac{1}{2}$ அங்.)
இருந்து 18 வரை $1\frac{1}{2}$,,
18, 6 வரை சாய்வு கோடு இணைக்கவும்)
இருந்து 18 வரை $\frac{1}{4}$ அங்.
இருந்து 7 வரை $1\frac{3}{4}$ அங்.
இருந்து 21 வரை $\frac{1}{2}$ அங்.
இருந்து 10 வரை $1\frac{3}{4}$,,
இருந்து 11 வரை $1\frac{3}{4}$ அங்.
இருந்து 9 வரை $\frac{1}{2}$,,
இருந்து 25 வரை $11\frac{1}{2}$ அங்.
$\frac{1}{4}$ புட்டம் சுற்றளவு $+2\frac{1}{2}$ அங்.)
இருந்து 0 வரை $4\frac{1}{2}$,,
இருந்து 27 வரை 5 ,,

25, 21 எண்கள் உள்ள பின்பக்க வளைவு
தில் உள்ளபடி இணைக்கவும்.

25, 21 எண்ணுள்ள பின்பக்க வளைவுக்
21, 23, 24 எண்ணுள்ள அடிக்காலுக்கும்
லுக்கு துணிவைத்து வெட்டவும்.

புதிய வெளியீடு!

தையற்கலை

ஆசிரியர் : K. P. சுந்தரம் G. C. T.

பெண்களுக்கும் சிறுமிகளுக்கும் உரிய பல விதஉடைகளை வெட்டித் தைக்கும் முறை இந்நூலில் 50-க்கு மேற்பட்ட விளக்கப் படங்களுடன் வரையப்பட்டுள்ளது. ஆசிரியர் துணையின்றித் தாமே வெட்டித் தைப்பதற்குச் சிறந்த நூலாகும். எவரும் எளிதில் கற்றுக் கொள்ளலாம். தமிழில் முதன் முதல் வெளி வரும் தையற்கலைப் புத்தகமாகும்.

பெண்ணின் பெருமைக்குச் சிறந்த கலைத் துறை ஏடாகும். அரசாங்கத் தேர்வில் வெற்றி பெற விரும்பும் பெண்மணிகளுக்குப் பெரிதும் உதவி செய்யும். விலை ரூ. 2 0 0.

கிடைக்குமிடம் :

பாரி நிலையம்

59, பிராட்வே, சென்னை-1.

முன்பக்கம் 12, 13 எண்கள் உள்ள இடத்தில் இரண்டு மடிப்புகள் (பிளீட்) அமைக்கவும்.

பின்பக்கத்தில் 27, 28 எண்கள் உள்ள இடத்தில் $\frac{3}{4}$ அங். அகலம், 5 அங். நீளம் (டார்ட்) டக் பிடிக்கவும்.

தையலுக்கு $\frac{1}{4}$ அங். சேர்த்து படம் வரையப்பட்டுள்ளது. ஆகவே பின்பக்க வளைவு கோட்டிற்கு $\frac{1}{4}$ அங். உள்பக்கம் தைக்கவும். ஒவ்வொரு எண்ணையும் படத்தில் உள்படி இணைத்த பிறகே வெட்டத்தொடங்கவும்.





Regd. No. M 6296 MANRA

வெளிவந்துவிட்டது ! வெளிவந்துவிட்டது !!

மதமும் மூடநம்பிக்கையும்

[இங்கர்சால்]

தமிழ்த்தழுவல் ஆசிரியர்

இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.

விலை ரூ 1

திராவிடப் பண்ணை
தெப்பக்குளம் அஞ்சல்
திருச்சி

தமிழ் நாட்டில் தலை சிறந்த

வெண்சங்கு சீயக்காய்தூள்

எங்கும் கிடைக்கும்

எங்களிடம் தயாராகும் மணத்தில் சிறந்த

செல்வம்–ராணி ஊதுபத்திகளை

வாங்கி உபயோகியுங்கள்

தயாரிப்பாளர்:- வெண்சங்கு சீயக்காய்தூள் தொழிற்சாலை
3037-38, டபீர் குளர் ரோடு, தஞ்சாவூர்.

Edited, Printed and Published by V. R. NEDUNCHEZHIYAN M.A.
at MANRAM ACHAKAM at 26, Nainiappan St, Mannadi, MADRAS